வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

Email : news@eelanadu.lk மலர் : 01 12.11.2021 வெள்ளிக்கிழமை இதழ் : 342 பக்கங்கள் : 16




## மார்ச் 15இல் புனிதர் பட்டம் பெறுகிறார் முதல் தமிழரான தேவசகாயம்பிள்ளை!



### வத்திக்கானில் வைத்து வழங்குகிறார் பாப்பரசர்

சென்னை, நவ 12

கன்னியாஸ்திரிகள், குருக்கள், ஆயர்கள் போன்றவர்களுக்கு மட்டுமே இதுவரை புனிதர் பட்டம் வழங்கப்பட்டு வந்த நிலையில் முதன் முறையாக இந்தியாவைச் சேர்ந்த சாமானியர் ஒருவருக்கு புனிதர் பட்டம் வழங்கப்படவுள்ளது. இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்துக்கு மாறிய கன்னியாகுமரியைச் சேர்ந்த தேவசகாயம்பிள்ளைக்கு புனிதர் பட்டம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 15

## மோசமான காலநிலை: 222,590 பேர் நாடு முழுவதும் பாதிப்பு

கொழும்பு, நவ. 12

பலத்த மழை மற்றும் மோசமான வானிலையால் நாடு முழுவதும் 2 இலட்சத்து 22 ஆயிரத்து 590 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 11 15

## அரசியல் தீர்வும் அபிவிருத்தியும் தமிழ் மக்களுக்கு மிக அவசியம்!



### இந்தியா அதில் உறுதி என்று சம்பந்தனிடம் தூதர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 12

“போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வும், அபிவிருத்தியும் மிகவும் அவசியம். இவற்றை நிறைவேற்றிக் கொடுக்க இந்தியா தம்மாலான அனைத்து வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது.”

- இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார். 15

## வெள்ள இடரினால் யாழில் 10,261 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

10,261 குடும்பங்களைச் சேர்ந்த 34,075 நபர்கள் யாழ். மாவட்டத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனரென மாவட்ட இடர் முகாமைத்துவ 15

## 19 பேர் கொரோனாவுக்கு பலி

கொழும்பு, நவ. 12

கொரோனா தொற்று காரணமாக நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் 19 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 15

## ‘டான்’ அலுவலகத்தில் நாளை குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதிப் பற்றாக்குறை நிலையைக் கருத்தில்கொண்டு அதற்கு உதவும் நோக்குடன் டான் தொலைக்காட்சி நிறுவனம் ஏற்பாடு செய் 15

## எல்லை மீள் நிர்ணயம் மூலம் இனப்பரம்பலை மாற்ற சதி!

### கஜேந்திரகுமார் எம். பி. சாடல்

கொழும்பு, நவ. 12

எல்லை மீள் நிர்ணயம் என்ற பெயரில் வடக்கு, கிழக்கின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் திட்டமிட்ட சதித்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். 15

## மீண்டும் நாளாந்த தொற்று 700 ஐ கடந்தது

கொழும்பு, நவ. 12

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 715 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. 15

## தமிழர்களுக்கு ஒரு சட்டம் சிங்களவருக்கு வேறொன்றா?

### பாராளுமன்றில் சிறீதரன் எம். பி. கேள்வி



கொழும்பு, நவ. 12

தமிழர்களின் பரம்பரை நிலங்களைப் பறித்து, அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் அல்லவென்ற திட்டத்தை அரசாங்கம் கச்சிதமாக முன்னெடுக்கின்றது என்று 15

## யுகதனவி உடன்படிக்கை அடுத்த வாரம் சபைக்கு!

கொழும்பு, நவ. 12

உத்தேச ‘யுகதனவி’ உடன்படிக்கை அடுத்த வாரம் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று மின் சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்காரால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் 15

## ஒன்றுகூடல்களை நடத்துவதற்கு புதிய கட்டுப்பாடுகள் நடைமுறை

கொழும்பு. நவ. 12

கோவிட்-19 தொற்று ஏற்பட்டுள்ள இடங்களில் ஒன்றுகூடல் தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து சுகாதார அமைச்சினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. 15



# சிரியாவில் பயிற்சி பெற்றுள்ள எவரும் ஈஸ்டர் தாக்குதலில் பங்கேற்கவில்லை

## சபையில் கூறினார் ரணில்

கொழும்பு, நவ. 12

**ஈஸ்டர் தாக்குதலில் சிரியாவில் ஐ. எஸ். பயிற்சி பெற்ற முஸ்லிம் இளைஞர்கள் எவரும் பங்குபற்றவில்லை என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக நான் இங்கு ஒன்றைக் கூற வேண்டும். சிரியாவுக்குச் சென்று ஐ. எஸ். பயங்கரவாதப் பயிற்சி பெற்ற எந்தவொரு நபராலும் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விடயத்தை யாரும் அரசியல் மயப்படுத்தக்கூடாது. விசாரணை அறிக்கைகளை ஏன் பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கவில்லை என்பதுவே எமது கேள்வியாகும்.

சாதாரணமாக எந்தவொரு ஆணைக்குழுவில் விசாரணைகள் நடக்கும்போதும் சாட்சிகளின் வாக்குமூலம் உள்ளிட்டவற்றின் அறிக்கைகளை வெளிப்படுத்திக் கொண்டுதான் வருகிறோம்.

இவற்றை சபையில் இருந்து மறைக்க முடியாது. அவ்வாறு விசாரணைகளை மறைப்பது எமது வரப்பிரசாதங்களை மீறும் செயல்படாகும்.

தாக்குதல் இடம்பெற்ற உடனேயே, பொலிஸாரும் சி.ஐ.டியினரும் இணைந்துதான் பொரளை உள்ளிட்ட பகுதிகளில் பதுங்கியிருந்த சூத்திரதாரிகளை கைது செய்தார்கள். மாறாக புலனாய்வுப் பிரிவினர் அல்லர் என்பதையும் நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார். (அ)

# முஸ்லிம்கள்மீதான தாக்குதல்களின் பின்னணியில் மறைமுக தொடர்புகள்

## கூறுகிறார் டிலந்த விதானகே

கொழும்பு, நவ. 12

முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களின் பின்னணியில் மறைமுக தொடர்புகள் இருப்பதாக பொதுபல சேனாவின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

கொழும்பின் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், அளுத்கமவில் இடம்பெற்ற தாக்குதல்களில் பொதுபல சேனா அமைப்புக்கு தொடர்பில்லை என்று அவர் வலியுறுத்தினார்.

எவ்வாறாயினும், மஹிந்த அரசாங்கத்துக்கும், அப்போதிருந்த சில அமைச்சர்களுக்கும் இதில் தொடர்பு இருக்கலாம் என அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

பொதுபலசேனாவின் எழுச்சிக்கு அன்றைய ராஜபக்ஷ ஆட்சியினரும் சில அமைச்சர்களும் அஞ்சினார்கள்.



எனவே சமூகத்தில் பிரச்னைகளை உருவாக்கி, பொதுபல சேனாவின் மீது பழியைச் சுமத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுபல சேனா அமைப்பில் அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, தொடர்புபடவில்லை என்றும் அவர் வலியுறுத்தினார்.

அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவே, பொதுபல சேனாவை உருவாக்கினார் என்று சிலர் கருதினர். இது உண்மையற்ற விடயம் என்று டிலந்த விதானகே குறிப்பிட்டார்.

ஞானசார தேரருக்கும் ஜனாதிபதிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இல்லையெனில் அவரை செயலணி ஒன்றின் தலைவராக , ஜனாதிபதி நியமிக்கமாட்டார். எனினும் பொதுபல சேனாவை நிறுவுவதில் கோட்டாபய பின்னால் இருக்கவில்லை என்பதை தான் உறுதியாகக் கூறுவதாக டிலந்த தெரிவித்தார்.

பொதுபலசேனாவுக்கு எங்கிருந்து நிதி கிடைத்தது என்ற கேள்விக்கு பதிலளித்த, விதானகே, சில தனிப்பட்ட நிதிகள் பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டார்.

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள், குறிப்பாக தென் கொரியாவில் உள்ளவர்கள் பொதுபல சேனாவுக்கு நிதி உதவி வழங்கியதாகவும் அவர் கூறினார்.

## எல்லை தாண்டிய

# இந்திய மீனவருக்கு விளக்கமறியல் நீடிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 12

அண்மையில் கைது செய்யப்பட்ட எல்லை தாண்டிய இந்திய மீனவர்களுக்கு இன்று வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று காணொலி ஊடாக இடம் பெற்ற விசாரணைகளை அடுத்தே பருத்தித்துறை நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியது.

இந்த மீனவர்கள் 23 பேர் சார்பிலும் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் சட்டத்தரணி லோ.குகதாஸ் ஆஜராகியிருந்தார்.

கைது செய்யப்பட்ட 23 மீனவர்களுக்கெதிராகவும் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்டமை, தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தக்கூடிய, அனுமதி பத்திரமின்றி மீன்பிடியில் ஈடுபட்டமை போன்ற மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் வழக்கை விசாரித்த நீதிபதி இன்று வெள்ளிக்கிழமை வரை வழக்கை ஒத்திவைத்ததுடன் இன்று குறித்த 23 மீனவர்களையும் மன்றில் ஆஜர்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணையின்போது யாழ். இந்திய துணைத் தூதாக அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர்.

# கோவிட் தொற்று உறுதியாகும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, நவ. 12

கோவிட் தொற்று உறுதியாகும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை உயர்வடைவதாகப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் உப தலைவர் எஸ். ஏ. யூ. ரி குலதிலக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் டிசெம்பர் மாதமாகும்போது நாட்டின் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்க கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## வடமாகாண மரநடுகை மாதம் 12 கார்த்திகை 2021

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்"

- **பிராங்க் லோயிட் றைற்** (அமெ.கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)

## 12.11.2021 வெள்ளிக்கிழமை

கல்வி TV CHANNEL-1

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## 12.11.2021 வெள்ளிக்கிழமை

கல்வி TV CHANNEL - 2

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
12.11.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# ஜனாதிபதியின் நல்ல கேள்வி?

அரசாங்கம் பல பக்கங்களிலும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. மக்கள் மத்தியில் அதிருப்திகள் உருவாகியிருப்பது வெள்ளிடைமலை. பங்காளிக் கட்சிகள் தொடர்ந்தும் உள்ளுக்குள் மோதிக் கொண்டிருக்கின்றன. இது ஒரு கட்டுக்கோப்பான அரசாங்கமாக இருக்குமென்னும் நம்பிக்கையும் பெருமளவு பொய்த்துவிட்டது. இந்த நிலையில்தான் ஜனாதிபதி மக்களை நோக்கி ஒரு நல்ல கேள்வியை கேட்டிருக்கின்றார். அதாவது, எங்களை அதிகாரத்திலிருந்து துரத்திவிட்டு பின்னர் ஏன் எங்களை தெரிவு செய்தீர்கள்? கடந்த ஆட்சியாளர்கள் உங்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யாத காரணத்தால்தானே - எங்களை தெரிவு செய்தீர்கள். நாங்கள் உங்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யாவிட்டால் எங்களை நிராகரியுங்கள். புதியவர்களை கொண்டுவாருங்கள். மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யாதவர்களை மீண்டும் நீங்கள் தெரிவு செய்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

உண்மையில் இது நல்ல கேள்வி என்பதில் மாற்று கருத்தில்லை. ஆனால், இந்தக் கேள்வியை, அவர் சிங்கள மக்களை நோக்கித்தான் முன்வைத்திருக்கின்றார்- ஏனெனில், அவர்கள்தான் அவர்களை தோற்கடித்தார்கள் - பின்னர் வெற்றிபெறவும் செய்தார்கள். ஒரு வகையில் இவ்வாறு மக்களுக்கு முன்னால் கூறுவதற்கும் ஒரு துணிவு தேவைதான். அந்த வகையில் ஜனாதிபதியை பாராட்டலாம்.

தமிழ் சூழலில் இப்படியொரு கேள்வியை முன்வைப்பதற்கான துணிவு எத்தனை அரசியல் தலைவர்களுக்குண்டு? ஒருவேளை இப்படியொரு கேள்வியை முன்வைத்தால் இதுவரை தமிழ் சூழலில் அரசியல் பயணம் செய்த அனைத்து மிதவாத தலைவர்களும் வெளியேற நேரிடும். ஏனெனில், மிதவாத தலைவர்களால் இதுவரை எந்தவொரு விடயத்தையும் சாதிக்க முடியவில்லை. இன்றிருக்கும் மாகாண சபைகூட - இயக்கங்களின் உயிர் தியாகங்களால் கிடைத்த ஒன்றுதான். தமிழ் மக்கள் ஆழமாக சிந்தித்தால் அவர்களது தெரிவு எப்போதுமே இயக்கங்களின் வழியாக வந்தவர்களின் பக்கமாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், இயக்கங்கள் அனைத்தையும் சாதிக்காவிட்டாலும்கூட, ஏராளமானவர்கள் தங்களின் உயிர்களை தியாகம் செய்திருக்கின்றனர். மேலும் பலர் இயக்க வாழ்வால், தங்களின் வாழ்க்கையையே இழந்திருக்கின்றனர். அவர்களும் மற்றவர்களை போன்று தங்கள் வாழ்க்கையைப் பற்றி மட்டும் சிந்தித்திருந்தால், இன்று பலர் முதன்மையான நிலைகளில் இருந்திருப்பர்.

அரசியல் என்பது ஓர் இலக்கை அடைவதற்கான கூட்டுச் செயல்பாடு. தனிநபர்கள் எவ்வளவுதான் கெட்டித்தனம் கொண்டவர்களாக இருந்தாலும்கூட, ஒரு கட்டத்திற்கு மேல் அவர்களால் பயணிக்க முடியாது. தனிநபர்களாக நோக்கினால் செல்வநாயகம் காலம் தொடக்கம் சம்பந்தன் வரையில் பல கெட்டித்தனமானவர்களை தமிழர் சமூகம் கண்டிருக்கின்றது. அவ்வாறாயின் பின்னர் ஏன் எதனையும் அடைய முடியவில்லை? இருக்கின்ற மாகாண சபையையாவது காப்பாற்ற முடியுமா - என்னும் கேள்வியுடன் தமிழர் அரசியல் எதிர்காலம் இன்று ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. ஏன்? கெட்டித்தனமானவர்களின், கெட்டித்தனத்திற்கு என்ன நடந்தது? குறிப்பாக சட்ட நிபுணர்களின் கெட்டித்தனத்திற்கு என்ன நடந்தது? சட்டத்தரணிகள் அரசியல் தெரிந்தவர்கள் என்னும் மாயை ஒன்று இப்போதும் தமிழ் சமூகத்தை பீடித்திருக்கின்றது. ஆனால், கடந்த காலத்தில் சட்டத்தரணிகள்தானே இந்த அரசியலை கையாண்டார்கள் - அவர்களால் எதை சாதிக்க முடிந்தது?

தமிழ் சமூகம் இனியாவது தனது அரசியல் தலைமைகள் தொடர்பில் சிந்திக்க முன்வர வேண்டும். அரசியல் தலைமையென்பது ஒரு மரபாக தொடர்வதல்ல. சூழல் மாறுகின்றபோது, அந்த சூழலுக்கு ஏற்ப தலைமைகள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் தங்கள் தலைமைகளை மாற்றிக் கொள்ளவேண்டும்.

# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யாழ். இந்துவின் நவீன விளையாட்டுதிடல்!

- அனந்த பாலகிட்ணர் -



இலங்கையின் புகழ் பூத்த கல்வி நிறுவனங்களில் ஒன்றாக யாழ்ப்பாணத்தில் வையகம் புகழ்ந்திட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளங்குகின்றது. ‘கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக’ என்ற மகா வாக்கியமே யாழ். இந்து கல்லூரி வாசகமாக இருக் கின்றது. எனவே, இந்த உயரிய வாசகத்துக்கு அமைவாக லண்டனில் வதியும் யாழ்ப்பாணம் இந்து கல்லூரியின் பழைய மாணவர்கள் பல்வேறுபட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்று சிறப்புற்றிருந்தாலும் தாம் கற்ற கல்வி நிறுவனத்தின் மாண்பினை மேம்படுத்தும் விதத்தில் யாழ். இந்து கல்லூரியின் விளையாட்டுத்திடலை மிக அற்புதமாக நவீனமயப் படுத்தி இன்று அதனை கல்லூரிக்கு அர்ப் பணிக்கின்றார்கள்.

ஒரு கல்விக்கூடத்தைப் பொறுத்தவரை வகுப்பறைகள் மாத்திரமல்ல. அந்தக் கல்லூரியின் விளையாட்டுத்திடலும் முக்கியத்துவம் மிக்கதாகவே இருக்கின்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எழுபதுகளின் ஆரம்பத்தில் கல்வி பயின்றபோது எமது ஆங்கில ஆசிரியராக இருந்த எஸ். சுந்தரதாஸ் கல்லூரி ஒழுக்க நடவடிக்கைளுக்கும் பொறுப்பாக இருந்தார். எனது வகுப்பறை சற்று குறும்புத்தனம்மிக்க வகுப்பறை. வகுப்பலிருந்த அனைவருமே ஆசிரியர் சுந்தரதாஸிடம் அடிக்கடி பிரம்படி வேண்டுவதோடு கன்னங்களிலும் அவரின் கைரேகைகள் பதியுமளவிற்கு நாம் பதம் பார்க்கப்படுவதுண்டு.

ஒரு தடவை ஆசிரியர் சுந்தரதாஸ் எம்மிடம், “பாடசாலைக்கு வந்தால் வகுப்பறையில் நன்கு படிக்க வேண்டும். அல்லது விளையாட்டுத்துறையில் நன்கு கால்பதிக்க வேண்டும். இதைவிடுத்து வகுப்பறையுமின்றி, விளையாட்டு மைதானமுமின்றி இருந்தால் நடுவீதியில்தான் வாழ்நாள் பூராவும் நிற்க வேண்டும்”, என்று கூறியிருந்தார்.

அந்த நல்லாசான் கூறியதற்கு அமைவாகவே யாழ். இந்துக் கல்லூரி கல்வியில் மாத்திரமல்ல. விளையாட்டுத்துறையிலும் நன்கு பரிணமித்திருந்தது. இருந்தபோதிலும் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் போன்றோ அல்லது ஏனைய யாழ்ப்பாணப் பிரதேச பாடசாலைகளின் போன்றோ யாழ். இந்துவின் மைதானம் ஒரு சதுரமான அமைப்பில் போதியளவு இடவசதியோடு காணப்பட்டிருக்கவில்லை. எமது கல்லூரி மெய்வல்லுநர் போட்டிகள் மற்றும் ஏனைய விளையாட்டுப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் மிக நல்ல முறையில் பிரகாசித்திருந்தது.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் அதிபர்களாக இருந்தவர்கள்கூட கல்வித்துறையில் மாத்திரமல்ல. விளையாட்டுத்துறையிலும் தமது மாணவப் பருவத்தில் சிறந்து விளங்கியிருந்தார்கள்.

கிரிக்கெட் பந்தய காலங்கள், உதைபந்தாட்ட பந்தய காலங்களில் விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கிய ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பயிற்சியளிக்கும்போது தாமும் மாணவர்களோடு மாணவர்களாக யாழ். இந்து மைதானத்தில் மனந்திறந்து விளையாடுவதை அவதானிக்க முடியும்.

இதுதவிர, மாணவர் தலைவர்களுக்கும் ஆசியர்களுக்கும் இடையேகூட கிரிக்கெட், உதைபந்தாட்ட பந்தயங்கள் இடம்பெறுவதுண்டு.

எனது காலத்தில் யாழ். இந்து அதிபராக இருந்த ஈ. சபாலிங்கம் தமது மாணவப் பருவத்தில் அகில இலங்கை ரீதியாகவும் உதைபந்தாட்ட விளையாட்டில் சிறந்த கோல் காப்பளராக இருந்தவர். பௌதிகவியல் ஆசிரியராக இருந்த அ. கருணாகரன் கூட தமது மாணவப் பருவத்தில் சிறந்த உதைபந்தாட்ட வீரராக இருந்தவர்.

அத்துடன் மெய்வல்லுநர் போட்டிகளிலும் ஆசிரியர் தி. விசாகராசா தமது மாணவப் பருவத்தில் தடி ஊன்றி பாய்தலில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் மத்தியில் சம்பியனாகவும் விளங்கியிருந்தார்.


எனவே, யாழ். இந்து மைதானத்தை பொறுத்தவரை சிறந்த விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல. உன்னதமான ஆசிரியர்களும் கால்பதித்த ஒரு திடலாகவே நவீன மயப்படுத்தப்பட்ட இன்றைய திடல் விளங்குகின்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மிக உயர்ந்த தரத்திலான விளையாட்டு வீரரர்களை உருவாக்கியுள்ள நிலையில் இன்று நவீனமயப் படுத்தப்பட்ட அந்தக் கல்லூரியின் விளையாட்டுத்திடல் அங்குரார்ப்பணம் செய்யப்படும்போது மிக உயர்வாக மனதில் நிறுத்தப்பட வேண்டிய கிரிக்கெட் விளையாட்டு வீரரே எஸ். சூரியகுமார். பிராமணர் சமூகத்தைச் சேர்ந்த எஸ். சூரியகுமார் யாழ். இந்துவின் கிரிக்கெட் அணியில் மிக அற்புதமான சுழல்பந்து வீரராக விளங்கியிருந்தார்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக எண்பதுகளின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியில் அவர் கடமையாற்றியபோது வங்கிக்கு வெளியே நின்றிருந்த சமயம் ஒரு ஷெல் வீழ்ந்து வெடித்ததில் அவர் அகால மரணத்தை தழுவியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனைய யாழ்ப்பாண பாடசாலைகளுக்கும் முன்னுதாரணமாக நவீன வசதிகளுடன் இன்றைய யாழ்ப்பாண இந்து கல்லாரி மைதானம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுவது வரலாற்று முக்கியத்துவம்மிக்கதாகவே இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



நவம்பர் - 12 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - ஐப்பசி - 26
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : நவமி

## இன்றைய ராசிபலன்

12.11.2021

**மேடம்** மனதுக்கு நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கை கொள்வர். உடல் ஆரோக்கியம் நிம்மதியளிக்கும். சேமிப்பை அதிகரிப்பீர்கள். செய்வதற்கு முன்பு சிந்தியுங்கள். மகிழ்ச்சி கூடும்.

**இடபம்** திடீர் வரவு உண்டு. இன்றைய நாள் சுமுகமாகச் செல்வதற்கு முயல்வீர்கள். நேர்மையற்ற நண்பர்களை கருணையின்றி விலக்குவீர்கள். முன்னேற்றத்திற்கு உறவினர் முட்டுக்கட்டை போடக்கூடும்.

**மிதுனம்** நேற்றிருந்த கவலைகள் பனிபோல் இன்று கரையும். எந்த வேலையிலும் குழப்பம் ஏற்படாமல் கவனமாயிருங்கள். எதையும் கவனத்துடன் கையாளுங்கள். அதிக பேச்சு வேண்டாம்.

**கடகம்** எதையும் சமாளிக்கும் பக்குவத்தை உண்டாக்கிக் கொள்ளுங்கள். குடும்பத்தில் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுபவர்களைக் கண்டுகொள்ள வேண்டாம். அலுவலகப் பணியில் கவனம் செல்லும்.

**சிம்மம்** சுபமான செய்தி வரும். அதிர்ஷ்டம் கூடும். சிறு தடைகளை எளிதாக கடப்பீர்கள். நன்கு முயன்று மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று விடுவீர்கள்

**கன்னி** முயற்சியால் எண்ணம் நிறைவேறும். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி சிரமங்களை வெல்வீர்கள். வேலைப்பளு அதிகமானாலும் அதை எளிதாக சமாளித்து விடுவீர்கள்.

**துலாம்** தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த கடன் கைக்கு வரும். மற்றவர்களிடம் இருந்து பாராட்டு பற்றிய எதிர்பார்ப்பு வேண்டாம். பணியில் உங்கள் திறமையை நிரூபிப்பீர்கள். பாராட்டு உண்டு.

**விருட்சிகம்** தவறான விஷயங்களில் ஈடுபட வேண்டாம். மாலையில் நன்மை நிகழும். குழந்தைகளின் நடவடிக்கையால் ஏற்பட்டிருந்த கவலை தீரும். உங்களின் செல்வாக்கு, விடாமுயற்சி வெற்றி.

**தனுசு** அதிக முயற்சியுடன் செயல்கள் முடியும். பணப்பற்றாக்குறை தீரும். கவனம் தேவை. மனம் தளர வேண்டாம். வீண் விவா தங்களை தவிர்ப்பது நல்லது. மன உற்சாகம் பெருகும்.

**மகரம்** கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வது நல்லது. நண்பர்கள் உங்களிடம் உதவி கேட்பர். நிதானமான நாளாக இருக்கும். சிலருடன் இருந்த கருத்து மோதல் நீங்கும். அமைதியான நாள்.

**கும்பம்** உங்கள் முன்யோசனை வாழ்வில் முன்னேறத் துணை செய்யும். தாய், தாய் வழி உறவினரின் அன்பும், உங்களின் அறி வுத்திறன் வெளிப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

**மீனம்** அலுவலக விவகாரங்கள் உங்களுக்கு சாதகமாக அமையும். புதிய வீடு, நிலம் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். உங்களின் தனித்திறன் வெளிப்படும். அறிவுபூர்வமாக செயல்படுவீர்கள்.

### சென்னையில் தொடரும் வெள்ளம்:

# படகு மூலம் வேலைக்கு செல்லும் அவலம்! விமான சேவைகளும் பெருமளவு பாதிப்பு



சென்னை, நவ. 12,

சென்னையில், கடந்த 5 நாட்களாகியும் வடியாத வெள்ளநீரால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறார்கள். வேலைக்கு செல்வோர் படகுகள் மூலமே சென்று வரும் நிலை உள்ளது. சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகளும் பாதிக்கப்பட்டன.

5 நாள்களாக பெய்யும் மழை சென்னை வாசிகளை பெரிதும் பாதித்திருக்கிறது. தாழ்வான பகுதிகளில் தேங்கிய மழைநீர், வீடுகளுக்குள்ளும் எட்டிப் பார்த்துள்ளது. இத னால் குடியிருப்புகள் மழை நீரில் சூழப்பட்டுள்ளன. நீர் நிலைகள் அருகேயுள்ள குடியிருப்புகளும் மழையால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன.

சில இடங்களில் மழைநீரில் மூழ்கி கிடக்கும் வீதிகளால் போக்குவரத்து தடைபட்டிருக்கிறது. வேளச்சேரி, நுங்கம்பாக்கம், திருவொற்றியூர், எண்ணூர், காசிமேடு, தண்டையார்பேட்டை, கே.கே.நகர், விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, கொளத்தூர், கொரட்டூர், மந்தைவெளி, அசோக்நகர், சூளை, பட்டாளம், பெரவள்ளூர் என நகரின் பல பகுதிகளில் பெரும்பாலானோரின் வீடுகளில் மழைநீர் புகுந்திருக்கிறது.

கனமழை தொடர்வதால் 3 வது நாளாக சென்னையில் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளன. புதுடில்லி, கொல்கத்தா, மதுரை, திருச்சி உள்ளிட இடங்களில் இருந்து சென்னை வந்த 11 விமானங்கள் பெங்களூர் அல்லது ஹைதராபாத்திற்கு திருப்பி விடப்பட்டன.

# அ.தி.மு.கவில் சசிகலா உரிமை கோர எந்தவிதமான அடிப்படையும் இல்லை!

### பன்னீர்செல்வம் தரப்பில் வாதம்

சென்னை, நவ. 12,

அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் செல்லாது என அறி விக்கக்கோரி சசிகலா தொடர்ந்த வழக்கில், "அ.தி.மு.கவில் உரிமை கோர சசிகலாவிற்கு எந்த அடிப்படையும் இல்லை" என ஓ.பன்னீர் செல்வம் தரப் பில் வாதிடப்பட்டது.

கடந்த 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடை பெற்ற அ.தி.மு.க. பொதுக் குழுக் கூட்டத்தில், சசிகலா மற்றும் தினகரனை பொதுச் செயலாளர், துணை பொதுச் செயலாளர் பதவிகளில் இருந்து நீக்கி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எதிர்த்தும் பொதுக்குழு கூட்டத்தை செல்லாது என அறிவிக்கக்கோரியும் சசிகலா தரப்பில் தொடரப்பட்ட வழக்கு விசாரணை சென்னை நகர நீதிமன்றில் நடந்து வருகி றது.

நேற்று அந்த வழக்கு மீண் டும் விசாரணைக்கு வந்தது. அப்போது ஓ. பன்னீர்செல்வம் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி வாதாடும் போது கூறிய தாவது:-

சசிகலா கட்சியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு, அதனை டில்லி உயர் நீதிமன்றில் தேர்தல் ஆணையம் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தநிலையில், தன்னை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் என சசிகலா தவறான தகவல்களை தெரிவித்து வருகிறார்.



அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளரை தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டுள்ளது. இரட்டை இலை சின்னத்தை பயன் படுத்தவும் அனுமதி வழங்கி உள்ளது. சசிகலா அ.தி.மு. கவிலேயே இல்லை என்கிற போது கட்சியின் உறுப்பினர் கள் விவரம், சொத்து, வைப்பு நிதி, தலைமை அலுவலகத்தின் சாவி ஆகியவற்றை தன்னிடம் ஒப்படைக்கும் படி கோருவது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல. அ.தி.மு.க.வில் உரிமை கோர சசிகலாவிற்கு எந்த அடிப்படையும் இல்லை" என சட்டத்தரணி வாதாடினார். வழக்கு விசாரணை இன்றும் நடைபெறும்.

# முல்லைப்பெரியாறு குறித்து கேரள அரசு பேச அழைத்தால் தமிழகம் ஏற்கக்கூடாது

### வலிறுத்துகின்றார் ராமதாஸ்



சென்னை, நவ. 12,

"முல்லைப்பெரியாறில் புதிய அணை கட்டுவது குறித்து பேச கேரள அரசிடமிருந்து அழைப்பு வந்தால் அதை தமிழகம் ஏற்கக்கூடாது" என பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித் திருப்பதாவது:

"முல்லைப்பெரியாறு அணை வலிமையாக உள்ளது. முல்லைப்பெரியாறு அணையின் நீர்தேக்க பகுதிகளில் ஏராளமான சொகுசு விடுதிகளும், கேரளத்து பிரபலங்களின் மாளிகைகளும் கட்டப்பட்டுள்ளன. அணையின் நீர்மட்டம் 152 அடியாக உயர்த்தப்பட்டால் அவை நீரில் மூழ்கி விடும். அத்தகைய நிலைமை ஏற்படுவதை தடுக்கவே அணையின் நீர்மட்டத்தை உயர்த்தும் தமிழக அரசின் முயற்சிகளுக்கு கேரள அரசு தொடர்ந்து முட்டுக் கட்டை போட்டு வருகிறது.

புதிய அணை குறித்து தமிழகத்தை பேச்சுக்கு அழைப்பதன் மூலம் முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்த்தப்படுவதை தடுக்கவும், புதிய அணை குறித்த விவாதங்களுக்கு புத்துயிரூட்டவும் கேரளம் துடிக்கிறது. இதற்கு தமிழக அரசு வாய்ப்பளித்துவிடக் கூடாது. எனவே, முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டுவது உள்ளிட்ட எந்த சிக்கல் குறித்தும் கேரள முதல்வருடன், தமிழக முதல்வர் பேச்சு நடத்தக் கூடாது" என அறிக்கையில் கூறியுள்ளார்.

## மண்சரிவு அபாயம்; கொழும்பு–கண்டி போக்குவரத்துக்கு மாற்றுவழிகள்

கொழும்பு, நவ. 12

கண்டி-கொழும்பு பிரதான வீதியின் கீழ் கடுகன்னாவ பகுதி நேற்று முன்தினம் இரவு முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாயம் காரணமாக இப்பகுதி மூடப்பட்டுள்ளது. அதன்படி, கொழும்பிலிருந்து கண்டி நோக்கிப் பயணிக்கும் வாகனங்கள் அம்பேபுஸ்ஸ சந்தியில் திரும்பி குருநாகல், மாவத்தகம, கலகெதர, கட்டுகஸ்தொட்ட ஊடாக கண்டிக்கு பயணிக்க முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதவிர மாவனெல்லை நகரின் எஸ்.ஓ. சந்தியின் வலது புறமாக திரும்பி ஹெம்மாத்தகம, அம்புலுவாவ, கம்பளை, பேராதனை ஊடாக கண்டிக்கு பயணிக்க முடியும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் வாகனங்களும் இந்த வீதிகளை பயன்படுத்த முடியும் என பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசியமற்ற விழாக்களை பொதுமக்கள் தவிர்க்கவேண்டும்!

## சுகாதார பரிசோதகர் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, நவ. 12

**மீண்டும் கோவிட்-19 தொற்று பரவுவதற்கு வழிவகுக்கும் என்பதால், அத்தியாவசியமற்ற விழாக்களை நடத்துவதைத் தவிர்க்குமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் மதத் தலைவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

அண்மைய நாட்களில் வழிபாட்டுத் தலங்களில் பலர் ஒன்றுகூடிய பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவ்வாறான ஒரு சம்பவம் அண்மையில் தலவாக்கலையில் பதிவாகியுள்ளது.

தலவாக்கலையில் இவ்வாறான வைபவம் நடத்துவதற்குத் தேவையான அனுமதி பெறப்படவில்லை.

இதேபோன்ற சம்பவங்கள் இதே பகுதியில் இதற்கு முன்னர் பதிவாகியுள்ளன.

அடுத்த சில வாரங்களில் கோவிட்-19 தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிவேகமாக அதிகரிக்கக் கூடிய ஆபத்தான சூழ்நிலையில் நாடு உள்ளது.

நாட்டில் நிலவும் காலநிலையைக் கருத்தில் கொண்டு மதத் தலைவர்கள், செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட அனைத்து நபர்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

## சீரற்ற காலநிலையால் 222,590 பேர் பாதிப்பு!

கொழும்பு, நவ. 12

நுவரெலியா உட்பட நாட்டில் 17 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 63 அயிரத்து 317 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 22 ஆயிரத்து 590 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று காலை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளம், மண்சரிவு மற்றும் மின்னல் தாக்கத்தால் நேற்றுமுன்தினம் வரை 25 பேர் பலியாகியுள்ளனர். ஒருவர் காணாமல்போயுள்ளார். ஏழு பேர் காயமடைந்துள்ளனர். ஆயிரத்து 253 வீடுகள் பகுதியளவும், 23 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன என அதில் மேலும் கூறப்பட்டுள்ளது. (அ)

## சிமெந்து தட்டுப்பாடு டிசெம்பர் நடுப்பகுதியில் நிவர்த்தியாகும்

### இறக்குமதியாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 12


நாட்டில் நிலவும் சிமெந்து தட்டுப்பாட்டை எதிர்வரும் டிசெம்பர் மாத நடுப்பகுதிக்குள் நிவர்த்தி செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிமெந்து இறக்குமதியாளர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் வாரங்களில் சிமெந்து அடங்கிய கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

சிமெந்து தட்டுப்பாடு காரணமாகக் கட்டட நிர்மாணத்துறையினர் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இரணைமடுத் திட்ட வாய்க்கால் இடிந்தது



கிளிநொச்சி, நவ. 12

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தின் வாய்க்கால் கட்டுமானப் பணிகள் சில இடங்களில் இடிந்து விழுந்துள்ளன.

கடந்த 2015ஆம் ஆண்டு, இபாட் திட்டத்தின் கீழ் இவை புனரமைக்கப்பட்டிருந்தன. கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் இருந்து ஊரியான் பன்னங்கண்டி ஆகிய பகுதி விவசாய நிலங்களுக்கான நீர் விநியோகம் செய்யும் வாய்க்காலின் கட்டுமானமே இடிந்து விழுந்துள்ளது.

## சிவப்பு எச்சரிக்கை பகுதிகளிலுள்ள பாடசாலைகளை மூடத் தீர்மானம்

கொழும்பு, நவ. 12

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினால் இயற்கை அனர்த்த மத்திய நிலையத்தின் ஊடாக மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், மத்திய மாகாணத்திலும் பல இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனை மையப்படுத்தி மாணவர்களின் பாதுகாப்பு நலன் கருதி தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மத்திய மாகாண ஆளுநரிடம் அவசர கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எம். ரமேஸ்வரன்,

மறு அறிவித்தல் வரை மத்திய மாகாணத்தில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளை தற்காலிகமாக மூடும் அதிகாரத்தை அதிபர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பாதிப்பு ஏற்படக் கூடிய பகுதிகளில் உள்ள அதிபர்கள் பாடசாலைகளை தற்காலிகமாக மூடுவதற்கும் அது தொடர்பான அறிவிப்பை மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்-என்றார்.

# யாழ்.போதனா வைத்தியசாலை குருதி வங்கியில் ஆகக் குறைந்தளவு பாதுகாப்பு குருதியும் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 12

நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியவில்லை என யாழ். போதனா வைத்தியசாலை குருதி வங்கி அறிவித்துள்ளது.

"யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை குருதி வங்கியில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த குருதியின் அளவு 330 பைந்த் ஆகும்.

ஆனால் தற்போது இருக்கும் குருதியின் அளவோ 200 பைந்த் ஆகும். இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் குருதி வங்கி காணப்படுகின்றது.

இருக்கின்ற குருதியும் இன்னும் 5 நாள்களுக்கு மட்டுமே போதும். அதன் பின்பு ஏற்படும் இடர்கள் அல்லது விபத்துக்களுக்கோ, சத்திர சிகிச்சைகளுக்கோ, மகப்பேற்று சத்திர சிகிச்சைகளுக்கோ, குருதிச் சோகை நோயாளர்களுக்கோ மற்றும் ஏனைய நோயாளர்களுக்கோ குருதியை வழங்க முடியாத ஆபத்தான நிலைக்கு குருதி வங்கி தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் முதலில் மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் மருத்துவபீட மாணவர்களின் ஒத்துழைப்பு பெறப்படுவது வழமையாகும்.

ஆனால் தற்போது சுகாதார துறை சார்ந்தவர்களுக்கு கோவிட் - 19 இற்கான மேலதிக தடுப்பூசியாக பைசர் போட்டுக்கொண்டிருப்பதினால் ஒரு கிழமைக்கு அவர்களிடமிருந்து குருதியை பெற முடியாத நிலையிலுள்ளோம்.

ஏனைய குருதி வங்கிகளிடமிருந்தும் குருதியை பெற முடியாத நிலை காணப்படுகின்றது. எமது குருதி வங்கியின் பொது சுகாதார பரிசோதகர் வழமை போன்று குருதிக்கொடை முகாம் ஒழுங்கமைப்பாளர்களின் ஒத்துழைப்பை கோரியபோதும் கொரோனா நோய் நிலைமை காரணமாகவும் மற்றும் விரதங்கள் காரணமாக வும் குருதி முகாம்கள் ஒழுங்கு செய்ய முடியவில்லை.

அத்துடன் தினமும் அதிகளவான குருதிக்கொடையாளர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு கேட்கின்ற போதும் அதில் 10 -15 குருதிக்கொடையாளர்களே குருதித்தானம் செய்கின்றார்கள்.

இது போதாது, ஏனென்றால் தினமும் எமது குருதி வங்கியால் 30 -35 பைந்த் குருதி விநியோகிக்கப்படுகின்றது.

ஆகவே தற்போது ஏற்பட்டிருக்கும் இந்த ஆபத்தான நிலையை உடனடியாக தவிர்ப்பதற்கு வட மாகாணத்திலுள்ள இளையோர் குருதித்தானம் செய்யவதற்கு முன்வரவேண்டும் என பாதிக்கப்படவுள்ள உங்கள் உறவுகள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

குருதித்தானம் செய்வது தொடர்பாக 0212223063 , 0772105375 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்" என்று குருதி வங்கி அறிவித்துள்ளது. (அ)

# 20ஆவது திருத்தச் சட்டத்தினால் ஜனநாயகம் ஒழிக்கப்பட்டுள்ளது

## கரு ஜயசூரிய சீற்றம்



கொழும்பு, நவ. 12

**அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தால் ஜனநாயகம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றமும் தபாலகமாக மாற்றப்பட்டுள்ளது என்று சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தால் எதிர்பார்த்த எதுவுமே நடக்கவில்லை. மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இருந்தும்கூட 20 ஐ வைத்துக்கொண்டு பொருட்களின் விலையைக்கூட கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலைமையே காணப்படுகின்றது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டுவராமல் இருந்திருக்கலாம் என்பதே எனது கருத்து. அதன்மூலம் ஜனநாயகம் இன்று இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

20 ஆல் பாராளுமன்றம் தபாலகம்போல் உள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டமும் முழுமையானது என நான் கூறமாட்டேன். எனினும், அதன் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய பயங்கரமான அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அரசியலமைப்பு பேரவை அமைக்கப்பட்டு, உயர் பதவிகளுக்கான நியமனங்கள் உரிய வகையில் இடம்பெற்றன-என்றார்.(அ)

# இரத்தினபுரியில் மண்சரிவு

கொழும்பு, நவ. 12

இரத்தினபுரி, வேவெல்வத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹப்புகஸ்தென்ன - உட நுகே பொல பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

சுமார் 100 மீற்றர் பிரதேசம் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

எனினும், வீடுகள் அல்லது சொத்துக்கள் மற்றும் உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மண்சரிவு ஏற்பட்ட பகுதிக்குக் கீழே அமைந்துள்ள வீடுகளில் வதியும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# “வேந்தர் பதவியை வகிக்க எனக்கு தகுதி கிடையாது”

கொழும்பு, நவ. 12

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர் பதவியை வகிக்கும் தகுதி தனக்கு இல்லை என நாரஹேன்பிட்டி அபயராம தேரர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சியில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“நிச்சயமாக அது எனக்கு தகுதியற்றது. அவருக்கு தகுதி இருப்பதால் நியமித்துள்ளார். தகுதியா இல்லையா. அதை நீங்கள் என்னிடம் கேட்கக் கூடாது. நியமித்த ஜனாதிபதியிடம் கேளுங்கள்” என்று தேரர் பதிலளித்தார்.

# அரசாங்கத்துக்கு எதிராக வவுனியாவில் சுவரொட்டிகள்




வவுனியா, நவ. 12

வவுனியாவில் பல்வேறு இடங்களில் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த சுவரொட்டிகளில் அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலான வாக்கியங்கள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளன.

அந்தச் சுவரொட்டிகளில் மின்சாரம், எண்ணெய் சுயாதிபத்தியத்தைக் காட்டிக்கொடுக்கும் திருட்டு ஒப்பந்தத்தை ரத்து செய், அமெரிக்க - சீன - இந்திய மரணப்பொறியில் மக்களைச் சிக்கவைக்கும் ஏகாதிபத்திய சார்பு ஆட்சிக்கு எதிராவோம் போன்ற வாசகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (அ)





# முதல் 10 மாதங்களில் சுற்றுலாத்துறைக்கு 130 மில்லியன் அமெ.டொலர்கள் வருமானம்

பாரிஸ், நவ. 12

கொவிட் தொற்றுநோய் இருந்தபோதிலும், இலங்கையின் சுற்றுலாத்துறை ஜனவரி முதல் ஒக்ரோபர் வரை 130 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளுக்கு நாடு திறக்கப்பட்டதிலிருந்து, நேற்று வரை 70,000 க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்று அவர் கூறினார்.

பிரான்ஸ் பயண முகவர் நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையில் பாரிஸ் ஷங்ரில்லா ஹோட்டலில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற சந்திப்பின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்தில் இலங்கைக்கு சுமார் 200,000 சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்ப்பதாக தெரிவித்த அமைச்சர், அடுத்த வருடம் இலங்கையின் சுற்றுலாத் துறை மீண்டும் உயரும் என நம்பிக்கை வெளியிட்டார்.

குறிப்பாக பிரான்ஸில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அண்மைக்காலத்தில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாக தெரிவித்த அமைச்சர் ரணதுங்க, எதிர்காலத்தில் பிரான்ஸில் சுற்றுலா ஊக்குவிப்புச் செயற்பாடுகளை விரிவுபடுத்துமாறு அவர் கூறினார்.(அ)

# இடிந்து விழுந்தது மாடிக்கட்டடம் மயிரிழையில் உயிர்தப்பிய மூவர்!



கொழும்பு, நவ. 12

கம்பளை - நுவரெலியா பிரதான வீதியில் அட்டபாகை எனும் இடத்தில் 2 மாடி வர்த்தக நிலையமொன்று இடிந்து விழுந்து முற்றாக சேதமடைந்துள்ளது. அப்பகுதி தாழிறங்கும் அபாயம் இருப்பதால் ஒரு வழி போக்குவரத்துக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கம்பளை நகரிலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவிலேயே அட்டபாகை அமைந்துள்ளது. அங்கு சிறிய நகரமொன்று உள்ளது. பிரதான வீதிக்கு அருகாமையிலேயே குறித்த வர்த்தக நிலையம் அமைந்திருந்தது.

எனினும், நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற கால நிலையில் நேற்று முன்தினமிரவு மேற்படி வர்த்தக நிலையம் முற்றாக சரிந்து விழுந்துள்ளது. பொருள்கள் அனைத்து மண்ணுக்குள் புதையுண்டுள்ளன.

வர்த்தக நிலையத்தில் இருந்த தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோர் வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு, உறவினர்கள் வீட்டுக்கு செல்வதற்கு வெளியே வந்த தருணத்திலேயே இவ்வனர்த்தம் இடம் பெற்றுள்ளது. இதனால் மூவரும் அதிஷ்டவசமாக உயிர் தப்பினர்.

(அ)

## சம்பள அதிகரிப்பைக் கோரி

# பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் இன்று பிற்பகலில் போராட்டம்

கொழும்பு, நவ. 12

2022 வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக தனியார் மற்றும் அரை அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை ரூபா 10,000 அதிகரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டபோதிலும், இதுவரை தமக்கு பதில் கிடைக்கவில்லை என சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொது சேவைகள் ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அனைத்து தனியார் மற்றும் அரை அரச ஊழியர்களும் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி இன்று பிற்பகல் 1 மணிக்கு பாராளுமன்றச் சுற்றுவட்டத்தில் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளரான அன்டன் மார்கஸ் தெரிவித்தார்.

2022 வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக சம்பள அதிகரிப்பு தொடர்பில் மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தனியார் துறையில் குறைந்தபட்ச தினக்கூலியை ரூ.1,000 ஆகவும், தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச மாத ஊதியத்தை ரூ.26,000 ஆகவும் உயர்த்தவேண்டும் என கோரிக்கை வைத்துள்ளோம் எனவும் அவர் கூறினார்.

மாதாந்த குறைந்தபட்ச சம்பளம் தற்போது ரூ.16,000 என்றும், எனவே ரூ.60,000க்கும் குறைவான ஊதியம் பெறும் அனைத்து ஊழியர்களும் ரூ. 10,000 அதிகரிப்பு பெறவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து எதிரணி எம்.பிக்கள் தவறான தகவல்!

## அமைச்சர் சரத் வீரசேகர குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 12

**பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹரின் பெர்ணான்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் தவறான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர் என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.**

பொதுப் பாதுகாப்புத்துறை அமைச்சர் சரத் வீரசேகர, நேற்று பாராளுமன்றத்தில் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹரின் பெர்ணான்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் பாராளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பிலேயே சரத் வீரசேகர தமது குற்றச்சாட்டை முன்வைத் தார்.

ஹரின் பெர்ணான்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர், தமது குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியுமானால், குற்றப்புலனாய்வுத் துறையினரிடம் வாக்குமூலம் வழங்கவேண்டும் என்றும் சரத் வீரசேகர கோரிக்கை விடுத்தார்.

கத்தோலிக்க மதகுருமார் சிலர் இது தொடர்பில், கருத்துக்களை வெளியிட்டு இன்று பிரச்னைக்குள் சிக்கியுள்ளதாகவும் அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிட்டார்.

சஹ்ரானின் மனைவி, தமது கணவரை புலனாய்வு அதிகாரி ஒருவர் வீட்டுக்கு வந்த சந்தித்தாக வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று , பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்ட தகவலும், மாலு மாலு விருந்தகத்தில் பொலிஸ் அதிகாரி தங்கியிருந்ததாக அவர்கள் குறிப்பிட்ட தகவலும் பொய்யானவை என்று சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்தநிலையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழு அறிக்கையையும் பாராளுமன்றத்தில் வெளியிடமுடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)



# கினிகத்தேனையில் கோர விபத்து ஒருவர் உயிரிழப்பு! இருவர் காயம்!!

கொழும்பு, நவ. 12

கினிகத்தேனை - கண்டி பிரதான வீதியில் கினிகத்தேனை பகதொழுவ பகுதியில் நேற்று காலை 7 மணியளவில் இ.போ.சவுக்கு சொந்தமான பழுது பார்க்கும் பஸ் ஒன்றும், கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர்.

நாவலப்பிட்டியவிலிருந்து ஹற்றன் நோக்கி சென்ற கனரக வாகனமும், ஹற்றனிலிருந்து இருந்து நாவலப்பிட்டிக்கு சென்ற பஸ் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

விபத்தில் கனரக வாகனத்தின் சாரதி உயிரிழந்துள்ளதோடு, பஸ்ஸின் சாரதியும், உதவியாளரும் காயமடைந்து நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து காரணமாக சுமார் 30 நிமிடங்கள் கினிகத்தேனை - கண்டி வீதி ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# முடக்கமே தீர்வாக அமைய வாய்ப்பு

## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 12

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்தால் நாட்டை மீண்டும் முடக்குமாறு பரிந்துரை செய்வதைத் தவிர சுகாதாரத் துறைக்கு வேறு வழியில்லை என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு மற்றும் பொதுமக்களின் போராட்டங்களால் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது சுகாதார வழிகாட்டுதல்கள் சரியான முறையில் பின்பற்றப்படவில்லை எனவும், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியால் ஒரே நாளில் அதிகளவானோருக்கு கொரோனா தொற்று பரவக் கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பொருளாதார நெருக்கடிக்குள் எம்.பிக்களும் சிக்கியுள்ளனராம்!

கொழும்பு, நவ. 12

"நான் உட்பட தற்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் மிகவும் கடினமாக வாழ்க்கையையே முன்னெடுத்து வருகிறோம்" - இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மாதிவெலவிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விடுதியில் தனக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் மழை காலத்தில் நீர் நிரம்புவதாகவும், குறித்த விடுதி மிகவும் பாழடைந்த நிலையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தூரப் பிரதேசங்களில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தனியார் வாகனங்களையே பயன்படுத்துகின்றனர் எனவும் பலமுறை அந்த வாகனத்தில் கொழும்புக்கு வந்து செல்கின்றனர் எனவும் குறிப்பிட்ட அவர், மேலும் அர்ப்பணிப்புச் செய்ய முடியாது என்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் கொடுப்பனவில் உறுப்பினர்களின் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது என்றும் கூறினார். (அ)

# பசிலுக்கு எதிரான திவிநெகும வழக்கு விசாரணை டிசெம்பரில்



கொழும்பு, நவ. 12

திவிநெகும நிதியில் தேர்தல் பிரசாரத்துக்கு கலண்டர்கள் அச்சிட்டமை தொடர்பில் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு நேற்றுக் காலை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வழக்கை தொடர்வது தொடர்பான சட்டமா அதிபரின் தீர்மானம் அன்றைய தினம் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படும்.

வழக்கின் இரண்டு சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட வேண்டியிருப்பதால், நேற்று அறிவிக்கப்படவிருந்த தீர்ப்பு அடுத்த நீதிமன்ற திகதியில் அறிவிக்கப்படும் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்சன டி சில்வா நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

வழக்கின் இரண்டாவது மற்றும் மூன்றாவது சாட்சிகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (அ)

# பூஸ்டர் தடுப்பூசி பெற்றவர்கள் 90 ஆயிரம் பேர்!

கொழும்பு, நவ. 12

இலங்கையில் மூன்றாம் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 90 ஆயிரத்தை அண்மித்துள்ளதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை மூன்றாம் தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 89 ஆயிரத்து 97 ஆக அதிகரித்துள்ளது.

அதேநேரம், நாட்டில் நேற்று முன்தினம் மாத்திரம் 30 ஆயிரத்து 20 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, ஆயிரத்து 767 பேருக்கு சினோபாம் தடுப்பூசியின் முதலாவது டோஸும் ஆயிரத்து 461 பேருக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம், 9 ஆயிரத்து 639 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் மூன்றாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ள என்று தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

# அமைச்சரின் குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்த மைத்திரி

கொழும்பு, நவ. 12

தாம், மூன்று வீடுகளை ஒன்றிணைத்து அதில் வசித்து வருவதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் தாம் பாராளுமன்ற உறுப்புரிமையை விட்டுவிலக முடியும் என்று மைத்திரிபால சிறிசேன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, அண்மையில் சுமத்தியிருந்த குற்றச்சாட்டு தொடர்பிலேயே மைத்திரிபால சிறிசேன, தமது பதிலை வழங்கினார்.

இந்தநிலையில், நாட்டின் ஜனாதிபதி ஒருவர் ஓய்வு பெற்ற பின்னர், அவருக்கு அமைச்சர் ஒருவருக்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தாம், இன்று வசிப்பது, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வசித்த வீடாகும் என்றும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (அ)

# பிபில கல்வி வலயத்தில் 6 பேருக்கு கொரோனா!

கொழும்பு, நவ. 12

பிபில கல்வி வலய காரியாலயத்தில் சேவையாற்றும் சேவையாளர்கள் ஆறு பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிபில வலயக் கல்விப் பணிப்பாளர் சுசில் விஜேதிலக தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக தித்தவெல்கிவுல மற்றும் யக்குன்னாவ ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள் இருவருக்கும் எல்பிட்டிய மகா வித்தியத்தின் மாணவர்கள் இருவருக்கும் கொரோனா தொற்ற உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்கள் அவர்களின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.



# சீனாவின் கறுப்புப் பட்டியலில் இலங்கை மக்கள் வங்கி!

**நா.யோகேந்திரநாதன்**

> **அண்மைக் காலமாக இலங்கையின் போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அதாவது இந்தியா, அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் என்பவற்றுடனான உறவுகளை வலுப்படுத்துவதில் இலங்கை தீவிர கவனம் செலுத்தி வருவதை அவதானிக்க முடிகிறது.**

அண்மையில் சீனாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவிருந்த சேதனப் பசளை ஏற்றுக்கொள்ளப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது. இப்பசளை தீங்கு விளைவிக்கக் கூடிய நுண்ணுயிரிகளைக் கொண்டிருந்ததாக இலங்கையின் விஞ்ஞான ஆய்வாளர்கள் தெரிவித்ததை அடுத்தே இப்பசளையின் இறக்குமதி இரத்துச் செய்யப்பட்டது.

ஏற்கனவே கையெழுத்திடப்பட்ட இப்பசளைக்கான கொடுக்குமதி இலங்கை மக்கள் வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், அதனுடைய முதலாவது கடன் தவணையைச் செலுத்த வில்லையெனக் கூறப்பட்டு, மக்கள் வங்கி சீனாவின் வர்த்தக கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டு விட்டதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் அறிவித்துள்ளார். அதேவேளையில் இப்பசளை இரு தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, ஒரு தரப்பால் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட, அதன் முடிவுக்கமைய அடுத்த நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் இலங்கை பசளையைத் திருப்பி அனுப்பும் சம்பவமும் சீனா மக்கள் வங்கியைக் கறுப்புப் பட்டியலில் இணைக்கும் சம்பவமும் அதிரடியாக இடம்பெற்றுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்திலிருந்து இன்று வரை சீனாவுக்கும் இலங்கைக்குமிடையே மிக நெருக்கமான நல்லுறவே நிலவி வந்துள்ளது. கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம், தெற்கு அதிவேக நெடுஞ்சாலை எனப் பல அபிவிருத்தித் திட்டங்களை சீனா இலங்கைக்கு வழங்கியிருந்தது. தற்சமயமும் கொழும்பிலிருந்து களனிவரை தூண்களில் அமைக்கப்படும் நெடுஞ்சாலையைச் சீனா நிறுவி வருகிறது.

இப்படியான நிலையில் சீனாவின் இந்த அதிரடி நடவடிக்கை பலருக்கும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கலாம்.

எனினும், ஜனாதிபதியோ, பிரதமரோ நிதியமைச்சரோ இதுவரை இவ்விடயம் தொடர்பாக எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. அது மட்டுமின்றி இவ்விடயம் தொடர்பாக இலங்கைத் தரப்பிலிருந்து எவரும் சீனத் தூதுவருடன் தொடர்பு கொண்டு மேற்படி சம்பவம் தொடர்பாக விளக்கமளித்ததாகவோ கறுப்புப் பட்டியல் விவகாரத்தை இரத்துச் செய்யும்படி கோரியதாகவோ தெரியவில்லை.

அதேவேளையில் பசளையின் தரம் நிர்ணயம் செய்யப்படாமலே எவ்வாறு கடன் ஒப்பந்தம் கையெழுத்தானது என்பது பற்றியோ இதை யார் மேற்கொண்டார்கள் என்பது பற்றியோ இதன் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது பற்றியோ இதுவரை எந்தவொரு விசாரணையும் நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இவ்விடயம் மஹிந்தானந்த அளுத்கம, சமல் ராஜபக்ஷ் ஆகிய இரு அமைச்சர்களின் அமைச்சுகளுடன் சம்பந்தப்பட்டதெனவும் கூறப்படுகிறது.

நல்லெண்ண அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகிய திட்டங்களை இடைநிறுத்தியது. அந்த நிலையில் சீனா அவற்றுக்கான செலவினங்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு அழுத்தம் கொடுத்தது. எனவே ஏற்கனவே 33% மட்டுமே சீனாவுக்கு வழங்கப்பட்ட துறைமுக நகரத்தின் பங்கை முழுமையாகவும் 30 வருட குத்தகைக்கு வழங்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருடங்களுக்கும் இலங்கை சீனாவுக்கு வழங்க வேண்டி வந்தது.

அதிலிருந்து சீனா ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் அபிவிருத்திக்குத் தாராளமாகவே உதவி செய்த போதிலும் தனது பொருளாதார, வர்த்தக நலன்கள் சார்ந்த விடயங்கள் தொடர்பான ஒப்பந்தங்களில் விட்டுக் கொடுக்காது என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும். எனவே தான் சீனா சேதனப் பசளை விடயத்தில் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

சீன உரம் திருப்பி அனுப்பப்பட்ட அதேவேளையில் இந்தியாவிலிருந்து திரவ நைதரசன் உரம் இறக்குமதி செய்யப்படவுள்ளது. மெனோ நைதரசன் திரவ உரம் ஒரு சேதனப் பசளையா என்ற கேள்வி இங்கு எழுத்தான் செய்கிறது. இந்திய உரம் கப்பலில் வருகிறது, விமானத்தில் வருகிறது எனச் செய்திகள் வந்தபோதிலும் தற்சமயம் இரு விமானங்களில் கொண்டு வரப்பட்டுள்ளது. சீன சேதனப் பசளை நிறுத்தப்பட்டு இந்திய இரசாயனப் பசளை இறக்குமதி செய்யப்படுவது ஏதாவது உள்நோக்கம் கொண்டதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தினால் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

பொதுவாகவே அண்மைக் காலமாக இலங்கையின் போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அதாவது இந்தியா, அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் என்பவற்றுடனான உறவுகளை வலுப்படுத்துவதில் இலங்கை தீவிர கவனம் செலுத்தி வருவதை அவதானிக்க முடிகிறது. இந்தியாவிலிருந்து நைதரசன் பசளை இறக்குமதி செய்யப்படுவதும் இம்முயற்சியின் ஒரு பகுதியாகுமெனவும் சிலரால் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய மின் நிலையத்தின் 40 வீதப் பங்குகள் அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இலங்கையின் எரிவாயு விநியோக உரிமையும் அமெரிக்காவுக்கே வழங்கப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகி விட்டது. இதற்கு எதிராக எரிபொருள் மின்சக்தி அமைச்சர் உதயன் கம்மன்பில உட்பட அரசாங்கத்தின் 11 பங்காளிக் கட்சிகள் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. மேலும் மின்சார சபைத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, பெற்றோலியம் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள், துறைமுக அதிகார சபைத் தொழிலாளர் அமைப்புகள், நீர்வழங்கல் சபை தொழிலாளர்கள் எனப் பல தரப்பினரும் மேற்படி நடவடிக்கைகளை எதிர்த்துப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் அரசாங்கம் தனது திட்டத்திலிருந்து பின்வாங்கும் அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

இன்னொரு புறம் திருமலை துறைமுகத்தின் எண்ணெய் குதங்கள் அமெரிக்காவுக்கு வழங்கப்படவுள்ளன. இதன் காரணமாக அமெரிக்கப் போர்க் கப்பல்கள் திருமலைத் துறைமுகத்துக்கு வரவும், தரித்து நிற்கவும் வாய்ப்புகள் ஏற்படும். அண்மையில் பிரிட்டன், அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் அணு ஆயுதம் தாங்கி நீர்மூழ்கிகள் இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்து போயுள்ளன. இதுபற்றி இலங்கைக்கான சீனத் தூதுவர் கருத்து வெளியிடுகையில் இலங்கை அணுவாயுதப் போருக்குள் தள்ளப்படும் அபாயம் ஏற்படலாமென எச்சரித்துள்ளார்.

நாட்டில் உணவுப் பொருட்கள் உட்பட சகல அத்தியாவசியப் பொருட்களினதும் நிர்ணய விலைகள் அகற்றப்பட்டுள்ளன. இதன் காரணமாகப் பொருட்களின் விலைகளை இறக்குமதியாளர்களும் உள்ளூார் வர்த்தக முதலைகளுமே தீர்மானிக்கும் நிலையில் பொருட்களின் விலைகள் படுமோசமாக அதிகரித்துள்ளன. எரிபொருள், எரிவாயு, சீனி, அரிசி போன்ற பொருட்களுக்குச் செயற்கையாகத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்படுவதும் அதையொட்டிவிலைகள் அதிகரிப்பும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. மக்கள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே கடன்களை வழங்குவதுண்டு. அவற்றில் தனியார் முதலீடுகளை ஊக்குவித்தல், அரச செலவினங்களைக் குறைத்தல் என்பனவாகும். அரச செலவினங்களைக் குறைத்தல் என்பதிலேயே ஊழியர்களின் சம்பளங்களை அதிகரிக்க மறுத்தல், பொருட்களின் கட்டுப்பாட்டு விலையை நீக்கி முழுச்சுமையையும் மக்கள் மீது சுமத்துதலும் அடங்கும்.

இந்த நிலையில்தான் இலங்கை அமெரிக்கா உட்பட மேற்குலகை திருப்தி செய்யும் வகையில் மக்கள் எதிரிப்பையும் பொருட்படுத்தாமல் மக்கள் விரோத நடவடிக்கைகளில் இறங்குகிறதா என்ற கேள்வி எழுகிறது. சீனப் பசளையைத் தடை செய்ததும் அந்த நோக்கத்தின் ஒரு பகுதியா என்ற சந்தேகமும் உண்டு.

எப்படியிருப்பினும் அமெரிக்க இந்திய மற்றும் மேற்கு நாடுகளினதும் சீனாவினதும் போட்டிக் களமாக மாறிக் கொண்டுள்ள நிலையில் அதன் பகடைக்காய்களாக மக்களைப் பலி கொடுப்பதை ஆட்சியாளர்கள் கனகச்சிதமாகச் செய்து வருகின்றனர்.

ஆனால் இன்று மக்கள் மத்தியில் எழுந்துவரும் எதிர்ப்பலைகளுக்கும் எழுச்சிப் போராட்டங்களுக்கும் ஆட்சியாளர்கள் பதில் சொல்ல வேண்டிய காலம் வெகு தொலைவில் இல்லை என்பது உலக வரலாறாகும்.

**- அருவி**

## காலநிலை மாற்றம் குறித்த மாநாடு

# கூடிப் பேசுவதற்கு அப்பால் செய்ய வேண்டியது என்ன?

■ நாராயணி சுப்ரமணியன்

மனிதர்களை வீடுகளுக்குள் முடக்கிவிட்டு, வீதிகள் முழுக்க மழைநீர் பெருக்கெடுத்து ஓடும் இந்த நேரத்தைவிட, காலநிலை மாற்றத்தைக் குறித்து விவாதிக்கப் பொருத்தமான தருணம் ஏது?

1992இல் காலநிலை மாற்றத்துக்கான ஐ. நா. கூட்டமைப்பு அமைக்கப்பட்டதிலிருந்து, கிட்டத்தட்ட ஒவ்வொரு வருடமும் உலகத் தலைவர்கள் ஒன்றுகூடி விவாதித்துவருகிறார்கள். 2015-ல் காலநிலை மாற்றத்துக்கான பாரீஸ் ஒப்பந்தம் கையெழுத்தானபோது, உலகளாவிய சராசரி வெப்பநிலை 1.5 பாகை செல்சியஸுக்கு மேல் அதிகரிக்காமல் தடுப்பதற்கு எல்லா முயற்சிகளையும் எடுக்க உலக நாடுகள் உறுதியேற்றன.

பாரீஸ் ஒப்பந்தம் எந்த அளவுக்குத் தங்கள் நாடுகளில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆய்வு செய்வதோடு, அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான புதிய இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும். அந்த வகையில், பாரீஸ் ஒப்பந்தம் கையெழுத்தானபிறகு முதல் ஐந்தாண்டு ஆய்வு மாநாடு 2020-ல் நிகழ்ந்திருக்கவேண்டும். ஆனால் கொரோனா காரணமாக இது தள்ளிப்போனது. Conference of Parties - 26 (COP26) என்று அழைக்கப்படும் இந்தக் காலநிலை பன்னாட்டு உச்சி மாநாடு, ஸ்காட்லாந்தின் க்ளாஸ்கோ நகரில் அக்டோபர் 31 முதல் நடந்துவருகிறது.

‘சராசரி வெப்பநிலை அதிகரிப்பை 1.5 டிகிரி செல்சியஸுக்குள் கட்டுப்படுத்தி வைப்பதற்கு, உலக நாடுகள் நான்கு முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும்’ என்று மாநாட்டு அமைப்புக் குழு இந்த மாநாட்டிற்கு முன்னதாகக் கூறியிருந்தது. நிலக்கரிப் பயன்பாட்டிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடுதல், காடுகளின் அழிப்பைக் குறைத்தல், மின்சார வாகனப் பயன்பாட்டை ஊக்கப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களில் முதலீடு செய்தல் ஆகியவையே அவை.

இதைப் பற்றி பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன், ‘ஹசுருக்கமாகச் சொல்லப்போனால் இந்த மாநாட்டின் முக்கியப் பேசுபொருள்கள் இவைதான்: கரி, கார்கள், காசு, மரங்கள்’’ என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த மாநாட்டில் முதல் மூன்று நாள்கள் முக்கியமானவை. உலகத் தலைவர்கள் ஒன்றுகூடி, தங்கள் நாட்டின் சூழல் குறித்துப் பல முக்கிய விஷயங்களை முன்வைப்பார்கள். அதன்பிறகு அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகள் கூடி விவாதித்து ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவார்கள்.

சீன அதிபர் ஜி ஜின்பிங், ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புதின் ஆகிய இருவரும் மாநாட்டில் கலந்துகொள்ளாதது கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. உலகளாவிய கரிம உமிழ்வில் சீனா முதல் இடத்தில் இருக்கிறது. சீன அதிபர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்தால் அது மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும். 2060ஆம் ஆண்டுக்குள் நிகர உமிழ்வுகளை பூச்சியமாக்குவதாக (Net zero emissions) சீன அதிபர் ஏற்கெனவே அறிவித்திருந்தார். ஆனால், சீனா கொஞ்சம் முயற்சி செய்தால் இன்னும் வேகமாகவே நிகர உமிழ்வுகளைக் கட்டுப்படுத்தலாம் என்று காலநிலை வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். கரிம உமிழ்வுகளின் உலகளாவிய பட்டியலில் நான்காவது இடத்தில் இருக்கும் ரஷ்யாவும் இதேபோன்று 2060ஆம் ஆண்டு இலக்கை அறிவித்திருக்கிறது.

> **உலக நாடுகள் கூடும் மாநாடுகளில் வழக்கமாகக் காணப்படும் குறைகூறல்கள், அரசியல் புறக்கணிப்பு, குழுச் செயல்பாடு போன்ற எல்லாமே இந்த மாநாட்டிலும் காணப்பட்டன. ஆனால் அரசியலுக்கு அப்பாற்பட்டுச் செயல்பட வேண்டிய நேரம் இது.**

மாநாட்டில் பேசிய இந்தியப் பிரதமர் மோடி, 2070இல் இந்தியா பூச்சிய உமிழ்வு இலக்கை அடையும் என்று உறுதி அளித்துள்ளார். ‘2030ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை 500 கிகா வாட்ஸாக இந்தியா அதிகரிக்கும். 2030ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் மொத்த எரிசக்தியில் 50% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பெறப்படும். அதே ஆண்டுக்குள் கரிம உமிழ்வு 100 கோடி குறைக்கப்படும். பொருளாதாரத்தில் கரிமத்தின் சார்பு 45% குறைக்கப்படும்’ என்றும் தெரிவித்துள்ளார். உலகளாவிய உமிழ்வுகளின் பட்டியலில் சீனா, அமெரிக்காவுக்குப் பிறகு மூன்றாவது இடத்தில் இருக்கும் இந்தியா, முதல் முறையாக நிகர பூச்சிய உமிழ்வைப் பற்றிய ஓர் இலக்கை அறிவித்துள்ளது.




அதிகமாக நிலக்கரியைப் பயன்படுத்தும் நாடான இந்தியா, நிலக்கரிப் பயன்பாட்டிலிருந்து விடுபட்டு எவ்வாறு புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நோக்கி நகரப்போகிறது, அதற்கான திட்டங்கள் எப்படிப்பட்டவையாக இருக்கும் என்று உலகளாவிய ஆற்றல் நிபுணர்கள் ஏற்கெனவே விவாதிக்கத் தொடங்கிவிட்டனர். இதில் இப்போதைக்கு சூரிய ஆற்றல் முக்கியப் பங்கு வகிக்கும் என்று தெரிகிறது.

2050இல் அமெரிக்கா நிகர பூஜ்ய உமிழ்வுகள் இலக்கை எட்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார். முன்னாள் அதிபரான டொனால்டு ட்ரம்ப் பதவியில் இருந்தபோது, பாரீஸ் ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகுவதாக அறிவித்திருந்தார். அதன்பிறகு அதிபரான ஜோ பைடன், அமெரிக்காவை மீண்டும் பாரீஸ் ஒப்பந்தத்தில் இணைத்தது முக்கியமான நிகழ்வாகக் கருதப்பட்டது. உலக கரிம உமிழ்வுகளில் இரண்டாவது இடத்தில் இருக்கும் அமெரிக்கா சர்வதேச அரசியலில் அதீத செல்வாக்கு உடையது என்பதால், அதன் நிலைப்பாடு உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது.



2030ஆம் ஆண்டுக்குள் காடு அழிப்பை முற்றிலுமாக நிறுத்துவதற்கான ஒப்பந்தத்தில் 100 நாடுகள் கையெழுத்திட்டிருக்கின்றன. காடு அழிப்பு தொடர்பான முந்தைய ஒப்பந்தங்கள் சரியாகச் செயல்படுத்தப்படாத நிலையில் இந்த ஒப்பந்தம் என்ன ஆகும் என்ற சந்தேகமும் இருக்கிறது.

இந்த மாநாட்டில் ஐ.நா. பொதுச்செயலாளர் அண்டோனியோ குட்டெரஸ் நிகழ்த்திய உரை முக்கியமானது. “சட்டென்று பார்த்தால் காலநிலைக்கான தீர்வு கண்டுபிடிக்கும் பாதையில் நாம் முன்னேறிக் கொண்டிருப்பதாகத் தோன்றும். ஆனால், நாம் இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. இப்போதைய சூழலில் காலநிலையை நாம் சரிசெய்துவிடலாம் என்ற நம்பிக்கை ஒருவிதமான மாயைதான். உண்மை நம் கண்முன் நிற்கிறது. நாம் காலநிலை மாற்றத்தைத் தடுத்து நிறுத்தாவிட்டால் அது நம்மைத் தடுத்து நிறுத்தி விடும்’’ என்று அவர் பேசியிருக்கிறார். “நீங்கள் நம்பிக்கையாக இருக்கமுடியாது, நீங்கள் பீதியடையவேண்டும்’’ என்று அனைவரையும் செயல்பாட்டுக்குள் இழுத்து வருகிற காலநிலைச் செயல்பாட்டாளர் க்ரெட்டா துன்பர்க்கின் உரையை இது நினைவுபடுத்தியது.

“250 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த க்ளாஸ்கோ நகரில்தான் ஜேம்ஸ் வாட் நிலக்கரியால் இயங்கும் நீராவி இன்ஜினைக் கண்டுபிடித்தார். இன்று இதே நகரில் எரிபொருளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்’’ என்ற பிரிட்டிஷ் பிரதமர் பொறிஸ் ஜோன்சன், காலநிலை மாற்றத்தை ஒரு டைம்பாமுடன் ஒப்பிட்டிருக்கிறார்.

உலகளாவிய காலநிலை மாநாடுகளில் தீவு நாடுகளின் உரிமைக்குரல்கள் எப்போதுமே ஒலித்தபடி இருந்திருக்கின்றன. வளர்ந்த நாடுகளின் பேராசையால் தங்களது வாழ்வுரிமைகள் நசுக்கப்படுவதைத் தீவு நாடுகள் பதிவு செய்தபடியே இருக்கின்றன. இந்த மாநாட்டிலும் பல தீவு நாடுகளின் தலைவர்கள் தங்களது அவலச் சூழலைக் காத்திரமான மொழியில் முன்வைத்திருக்கிறார்கள். “யார் கிளம்பலாம், யார் கைவிடப்படுவார்கள் என்ற இறுதி முடிவை எடுப்பதற்கான நேரம் வந்துவிட்டது, ஏனென்றால், ரயில் கிளம்பப்போகிறது’’ என்று கூறினார் பார்படோஸின் பிரதமர் மியா அமோர் மாட்லி.

பலாவ் தீவின் அதிபர் சுராங்கெல் விப்ஸ் ஜூனியரின் பேச்சு பலரின் மனசாட்சியை உலுக்கியிருக்கக்கூடும். ‘ஹகாலநிலை மாற்றத்தால் நாங்கள் அழிந்துகொண்டிருக்கிறோம். மெதுவான, வலிநிறைந்த ஒரு மரணத்தில் எந்த கண்ணியமும் இல்லை. இப்படிச் செய்வதற்குப் பதிலாக ஒரு வெடிகுண்டை வீசி எங்களைக் கொன்றுவிடுங்கள்’’ என்று தனது நாட்டின் நிலையை அவர் அழுத்தமாகப் பதிவு செய்தார்.

கரிம உமிழ்வுகளை அதிகமாக வெளியிடும் சில நிறுவனங்களும் மாநாட்டின் அங்கமாக இருப்பது, அதிகமான கரிம உமிழ்வுகளை வெளியிடும் உணவுகள் பரிமாறப்பட்டது, பிரதிநிதிகள் பலரும் பிரைவேட் ஜெட்டில் வந்து இறங்கியது போன்ற சில விஷயங்கள் சமூக ஊடகங்களில் கடுமையாக விமர்சிக்கப்பட்டன.

இதுபோன்ற மாநாடுகளில் ஏதாவது பேசிவிட்டுக் கலைந்து செல்வார்களே தவிர, தீர்வுகளில் யாரும் முனைப்புடன் இருப்பதில்லை என்பதே காலநிலைச் செயல்பாட்டாளர்களின் குற்றச்சாட்டு. இதற்குப் பதில் சொல்கிறார்களோ இல்லையோ, குடிமக்களின் எதிர்காலத்தைக் கருதியாவது செயல்பட வேண்டிய கட்டாயத்தில் உலக நாடுகள் இருக்கின்றன.

உலக நாடுகள் கூடும் மாநாடுகளில் வழக்கமாகக் காணப்படும் குறைகூறல்கள், அரசியல் புறக்கணிப்பு, குழுச்செயல்பாடு போன்ற எல்லாமே இந்த மாநாட்டிலும் காணப்பட்டன. ஆனால், அரசியலுக்கு அப்பாற்பட்டுச் செயல்படவேண்டிய நேரம் இது. காலநிலை அச்சுறுத்தல் அடுத்த கட்டத்தை எட்டிவிடாமல் இருக்கவேண்டுமானால், உலகத் தலைவர்கள் ஏதாவது ஓர் ஆவணத்தில் கையெழுத்திடும் ஒவ்வொரு முறையும் காலநிலை மாற்றத்தை நினைத்துப் பார்க்கவேண்டும். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி








மாதிரிப் பரீட்சை
விடைகள்

நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

### வினாத்தாள் - I
### விடைகளும் புள்ளித்திட்டமும்

40 × 2.5 = 100

| | | |
|---|---|---|
| 01. | (3) |  |
| 02. | (1) |  |
| 03. | (3) | C, F / B, D / A, E |
| 04. | (3) | பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம் |
| 05. | (2) | இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை. |
| 06. | (2) |  |
| 07. | (3) | யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்) |
| 08. | (3) | A - 10, B - 12, C - 6, D - 4 |
| 09. | (2) | நாட்டுப் பற்று |
| 10. | (3) | நாடு, நேயம், பெயர் |
| 11. | (3) | 43 |
| 12. | (1) | A |
| 13. | (3) | பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர். |
| 14. | (2) | O N / J K |
| 15. | (2) | 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள் |
| 16. | (3) | தென்மேற்கு |
| 17. | (2) | 11 |
| 18. | (2) | பேசின், குடத்தில் உள்ள நீரின் மொத்த அளவு 15*l* 750*ml* ஆகும். |
| 19. | (1) | பக்கங்கள் - 7 உச்சிகள் - 7 |
| 20. | (3) | 200g, 100g, 50g, 20g, 5g |
| 21. | (1) | செவ்வாய், ஞாயிறு |
| 22. | (3) | U, S, V |
| 23. | (2) | அப்பா |
| 24. | (2) |  |
| 25. | (3) | 6 நாட்களில் |
| 26. | (1) | 16 |
| 27. | (1) | v |
| 28. | (2) | 15 செக்கன்கள |
| 29. | (2) | 12 |
| 30. | (3) | ரூபாய் 150.00 |
| 31. | (3) |  |
| 32. | (2) | இரண்டாம் நிலை |
| 33. | (2) | 8 |
| 34. | (3) | பூக்கள் - 3<br>வண்ணத்துப்பூச்சிகள் - 4 |
| 35. | (3) | 8, 3 |
| 36. | (1) |  |
| 37. | (2) | 10 குற்றிகள் |
| 38. | (3) | H B A C E D G F |
| 39. | (1) |  |
| 40. | (2) | அ, ஈ, ஆ, உ, இ, ஊ |

### வினாத்தாள் - II
### விடைகளும் புள்ளித்திட்டமும்

| | | | |
|---|---|---|---|
| 1. | (i) | தஞ்சம் | ( 1 புள்ளி ) |
| | (ii) | வீதிகளிலும் | ( 1 புள்ளி ) |
| | (iii) | மக்கள் | ( 1 புள்ளி ) |
| | (iv) | கடும் | ( 1 புள்ளி ) |
| | (v) | பாடசாலைகளில் | ( 1 புள்ளி ) |
| | (vi) | பாதிக்கப்பட்டுள்ளன / புகுந்துள்ளனர் / விழுந்துள்ளன | ( 1 புள்ளி ) |
| 2. | (i) | இளமையிலேயே | ( 1 புள்ளி ) |
| | (ii) | தங்கப்பேழை | ( 1 புள்ளி ) |
| 3. | (i) | ( ✔ ) | ( 1 புள்ளி ) |
| | (ii) | ( ✕ ) | ( 1 புள்ளி ) |
| | (iii) | ( ✔ ) | ( 1 புள்ளி ) |
| 4. | (i) | ஒத்திகை | ( 1 புள்ளி ) |
| | (ii) | பழமொழி | ( 1 புள்ளி ) |
| 5. | (i) | விறுவிறுப்பாக | ( 1 புள்ளி ) |
| | (ii) | எதிர்கொள்ளல் | ( 1 புள்ளி ) |
| 6. | (i) | கடனும் , பயிரும் | ( 1 புள்ளி ) |
| | (ii) | பொய்யா தொழுகின் / உள்ளத்து ளெள்ளாம் | ( 1 புள்ளி ) |
| 7. | (i) | பீர்பால் | ( 1 புள்ளி ) |
| | (ii) | சிகைக்காய் | ( 1 புள்ளி ) |
| 8. | (i) | பகைவன் | ( 1 புள்ளி ) |
| | (ii) | பிளவு | ( 1 புள்ளி ) |
| | (iii) | “எந்த எண்? எனக்கும் ஒன்றும் புரியவில்லையே!” என்று சற்றக் குழப்பத்துடன் கேட்டான். | ( 1 புள்ளி ) |
| 9. | (i) | லாயம் | ( 1 புள்ளி ) |
| | (ii) | காலங்கள் | ( 1 புள்ளி ) |
| 10. | (i) | Chair (ii) Goat | ( 2 புள்ளி ) |
| 11. | (i) | Plants (ii) Clothes | ( 2 புள்ளி ) |
| 12. | (i) | இது உங்களுடையதா? | ( 1 புள்ளி ) |
| | (ii) | நான் உங்களுக்கு உதவலாமா? | ( 1 புள்ளி ) |
| 13. | | பந்திகாமறய | ( 1 புள்ளி ) |
| 14. | | வாருங்கள் பிள்ளைகள் | ( 1 புள்ளி ) |

# பஸிலின் கன்னி பட்ஜெட் சபையில் இன்று முன்வைப்பு



கொழும்பு, நவ. 12

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி அரசின் 2022ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஸ்தாபகரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ, பிற்பகல் 2 மணிக்கு பாதீட்டை முன்வைத்து உரையாற்றவுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் இரண்டாவது பாதீடு இதுவாகும். அதேபோல் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கன்னி வரவு - செலவுத் திட்டமும் இதுவாகும்.

சுதந்திரத்துக்கு பிறகு இலங்கையில் இதுவரை 75 வரவு - செலவுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்று முன்வைக்கப்படவுள்ள பாதீடானது 76ஆவது வரவு - செலவுத்திட்டமாகும்.

இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் நிதி அமைச்சுப் பதவியை வகித்து, பட்ஜட் தாக்கல் செய்யும் முதல் சந்தர்ப்பமும் இதுவாகும். பஸில் ராஜபக்சவுக்கு முன்னர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே நிதி அமைச்சராகச் செயற்பட்டார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் நிதி அமைச்சும் அவர் வசமே இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச நிதி அமைச்சராக இதுவரை 11 வரவு - செலவுத் திட்டங்களை முன்வைத்துள்ளார்.

இன்று பட்ஜெட் உரையின் போது பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், வரிக்கொள்கைகள், மக்கள் நலத்திட்டங்கள் உட்பட பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை தமதுரையின்போது நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெளிவுபடுத்தவுள்ளார். கொரோனாத் தொற்று நிலை என்பதால் முழுமையாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே பட்ஜெட் தொடர் நடைபெறும். பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இன்று நிதி அமைச்சரின் உரை மட்டுமே இடம்பெறும். நாளை 13ஆம் திகதி முதல் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் ஆரம்பாகும்.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. 23ஆம் திகதி முதல் குழுநிலை விவாதம் ஆரம்பமாகும்.

டிசம்பர் 10 ஆம் திகதி வரவு - செலவுத்திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும். ஞாயிறு மற்றும் பௌர்ணமி விடுமுறை தினங்களைத்தவிர ஏனைய நாட்களில் சபை தொடர்ச்சியாகக் கூடும். (இ)

# அரச பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் அமைச்சுப் பதவிகளைத் துறக்க வேண்டும்

## விமல், கம்மன்பில, தயாசிறியை விளாசித்தள்ளும் 'மொட்டு' எம்.பி.



கொழும்பு, நவ. 12

**"அரசை விமர்சிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் உடனடியாக அமைச்சுப் பதவிகளைத் துறக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் "மொட்டு" கட்சியின் தலைவர்கள் அவர்களை வெளியேற்ற வேண்டும்."**

- இவ்வாறு வலியுறுத்தினார் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி.

"மொட்டு" கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

"அரச கூட்டணியிலுள்ள பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் அமைச்சுப் பதவி உட்பட அனைத்துச் சலுகைகளையும், வரப்பிரதாசங்களையும் அனுபவிக்கின்றனர். ஆனாலும், அரசை விமர்சிக்கின்றனர். இவர்கள் தமது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே இவ்வாறு செயற்படுகின்றனர்.

அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்பதால் இராஜாங்க அமைச்சுப் பதவியை வைத்துக் கொண்டு தயாசிறி ஜயசேகர உளறுகின்றார். தனக்கு அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்று திஸ்ஸ விதாரண வெளிப்படையாகவே கவலை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, அமைச்சுப் பதவிகளை வைத்துக்கொண்டு விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்கள் தனிப்பட்ட தேவைகளுக்காகவே அரசை விமர்சிக்கின்றனர்.

அரசை விமர்சிப்பதாக இருந்தால் வெளியே சென்று விமர்சிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இவ்வாறானவர்களை எமது கட்சித் தலைவர்கள் வெளியேற்ற வேண்டும்" - என்றார். (இ)

## வசந்த உள்ளிட்ட 4 பேருக்கு பிணை

கொழும்பு, நவ. 12

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 4 பேருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் 3 ஆம் திகதி பாராளுமன்ற நுழைவாயில் வீதியில் இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கையின்போது, மஹரகம பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் காயம் ஏற்படுத்தியமை, பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் வசந்த முதலிகே, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் அமில சந்தீப மற்றும் கோசல அங்சமாலி, முன்னிலை சோசலிசக் கட்சியின் நிர்வாக செயலாளர் சமீர கொஸ்வத்த ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மஹிந்தவிடம் நாட்டை உடன் ஒப்படைக்கவும்

## மேர்வின் வலியுறுத்து

கொழும்பு, நவ. 12



"துட்டகைமுனு மன்னருக்குப் பிறகு இந்நாட்டில் உருவான சிறந்த தலைவரே மஹிந்த ராஜபக்ஷ. அவரிடம் 6 மாதங்களுக்கு நாட்டை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்."

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வில் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மஹிந்த ராஜபக்ஷவை நான் மதிக்கின்றேன். அவர் சிறந்த தலைவர். போரை முடித்தவர். பல அபிவிருத்திகளைச் செய்துள்ளார். ஆனால், தற்போதைய அரசின் செயற்பாடுகள் அவருக்கும் அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது.

பெயரளவில் மட்டுமே மஹிந்த பிரதமராக இருக்கின்றார். அவரிடம் நாட்டை 6 மாதங்களுக்கு ஒப்படைக்கவும். மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி இதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும். நான் இன்று மஹிந்த ராஜபக்ஷவுடன் இருந்திருந்தால் அவரை அழைத்துக்கொண்டு அரசிலிருந்து வெளியேறி இருப்பேன். மஹிந்தவைச் சூழ இன்று மோசடியான சிலரே உள்ளனர். அவர்கள் இருக்கும் வரை மஹிந்தவுக்கு ஆதரவு வழங்கமாட்டேன்." - என்றார். (இ)

# காணிகளைக் கையகப்படுத்தும்போது இனி உரிய இழப்பீடு!

## அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 12

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குக் காணிகளை கையகப்படுத்தும்போது உரிய பெறுமதியை காணி உரிமையாளர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான சட்டரீதியான திருத்தங்களை விரைவில் மேற்கொள்வதாக காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தலைவர் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

சொத்துக்களைக் கையகப்படுத்தும் போது வழங்கப்படும் இழப்பீடு போதுமானதல்ல என பல்வேறு தரப்பினர் குற்றஞ்சாட்டுவதாக அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் குறிப்பிட்டார்.

கிந்தோட்டை பலகைக் கூட்டுத்தாபனம் அமைந்துள்ள காணியை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி குழுவில் கோரிக்கை விடுத்தார்.

சுற்றுலாத் துறைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய காணிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும், அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ளும் நடைமுறைகள் இலகுபடுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மன்னார் - அலகட்டுக்கரை பகுதியில் 800 பேருக்கு காணி உரிமைப்பத்திரங்களை வழங்கும்போது ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பிலும் குழுவில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. காணிகளை இழந்த மக்களுக்கு அரசாங்கக் காணிகளை வழங்கும் வேலைத்திட்டம் கொரோனா காரணமாகத் தாமதமடைந்துள்ளது என வும், தற்போது அது இயல்பு நிலைக்கு வருகின்றது எனவும் காணி ஆணையாளர் நாயகம் இங்கு குறிப்பிட்டார்.

அரச காணிகளைச் சொந்தமாக்கிக்கொள்ளும் நிலைமை தற்போது காணப்படுவதால் அதனை நிறுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதன் அவசியம் தொடர்பிலும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

உதவி நில அளவையாளர் பதவிக்கு இணைத்துக்கொள்ளும் பரீட்சை அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. அந்தப் பதவிக்கு 1,500 பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். (இ)



## ஜப்பான் பிரதமராக புமியோ கிஷிடோ

ரோக்கியோ, நவ. 12

ஜப்பான் பாராளுமன்ற தேர்தலில் பிரதமர் புமியோ கிஷிடோ தலைமையிலான லிபரல் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றதை தொடர்ந்து, நாட்டின் பிரதமராக அவர் புதன்கிழமை மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவருக்கு முன்னர் பிரதமராக இருந்த யோஷிஹிடே சுகா, கொரோனா நெருக்கடியை சரியாகக் கையாளவில்லை என்று முறைப்பாடு எழுந்தது. அதையடுத்து, தனது பதவிக் காலம் முடிவதற்கு சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னரே அவர் பதவியை இராஜி நாமா செய்தார் சுகாவுக்குப் பதிலாக புமியோ கிஷிடோ பிரதமரானார்.

# காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த சீனா - அமெரிக்கா இணைய ஒப்புதல்!

கிளாஸ்கோ, நவ. 12

கிளாஸ்கோவில் நடக்கும் சி. ஓ. பி. 26 காலநிலை உச்சி மாநாட்டில் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த அடுத்த தசாப்தங்களில் இணைந்து செயல்பட வகையில் சீனாவும் அமெரிக்காவும் ஒப்புக்கொண்டுள்ளன. பசுமை இல்ல வாயுவை அதிகளவில் வெளியிடும் உலகின் முதலிரண்டு நாடுகளும் இந்த விடயத்தில் இணைந்து செயல்பட முன்வந்துள்ளமை வரவேற்பை பெற்றுள்ளது.

2015 பாரிஸ் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 1.5 பாகை செல்சியஸ் வெப்பநிலை இலக்கை அடைய இரு தரப்பும் ஒன்றாக செயல்படுவதற்கான உறுதியான உறுதிப்பாட்டை நோக்கிச் செயல்பட இரு நாடுகளும் உறுதியளித்துள்ளன.

சீனாதான் வேறு எந்த நாட்டையும்விட அதிகளவில் பசுமை இல்ல வாயு உமிழ்வை உருவாக்குகிறது என்றாலும், வரலாற்று ரீதியாக உலகில் உள்ள அனைத்து நாடுகளையும்விட அதிகளவில் கரியமில வாயுவை வளிமண்டலத்தில் செலுத்துவது அமெரிக்காதான். உலகின் இரண்டாவது மிகப்பெரிய பசுமை இல்ல வாயு உமிழும் நாடாகவும் அமெரிக்கா திகழ்கிறது.

இந்நிலையில் இரு நாடுகளும் இணைந்து காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் இலக்கை அடைவதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்த வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளன. உலக வெப்பநிலையை 1.5 பாகை செல்சியாசாகக் கட்டுப்படுத்துவது மனிதகுலம் மோசமான காலநிலை தாக்கங்களைத் தவிர்க்க உதவும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.




இந்நிலையில் காலநிலை மாற்றம் குறித்து ”சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே வேறுபாடுகளை விட அதிக உடன்பாடு உள்ளது” என சீனாவின் உயர்மட்ட காலநிலை பேச்சாளர் ஜி ஜென்ஹூவா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை, காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான உறுதிமொழிகளை உறுதி செய்யும் நோக்கில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோர் அடுத்த வார தொடக்கத்தில் மெய்நிகர் சந்திப்பை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)



## 600 ஐ. எஸ். அமைப்பினர் கைது!

### தலிபான்கள் அறிவிப்பு

கடந்த 3 மாதங்களில் 600 ஐ. எஸ். தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர். இதனால், நாட்டின் பாதுகாப்பு நிலவரமும் மேம்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது. ஆனால், ஒகஸ்ட் 30 ஆம் தேதி காபூல் சர்வதேச விமான நிலையத்தில் மனித வெடிகுண்டு தாக்குதலை நடத்தி ஐ. எஸ். தீவிரவாதிகள் தலிபான்களுக்கு சவால்விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து மசூதிகள், காபூல் மருத்துவமனை எனப் பல இடங்களில் ஐ. எஸ். அமைப்பினர் தாக்குதல்களை தொடுத்தனர். இதனால், ஆப்கானிஸ்தானின் அமைதி மிக மோசமானது.

இந்த நிலையில், கடந்த 3 மாதங்களில் ஐ. எஸ். கோரசன் அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் 600 பேரை தாம் கைது செய்துள்ளனர் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# தாய்வான் கடல்பரப்பு அருகே சீனா பெரும் போர் ஒத்திகை!

## அமெரிக்க பாராளுமன்ற குழு சென்றுள்ள நிலையில் பதற்றம்!

தைபே, நவ. 12

அமெரிக்க பாராளுமன்ற குழுவினர் தாய்வான் சென்றுள்ள நிலையில் தாய்வானுக்கு அருகேயுள்ள கடற்பரப்பில் முப்படைகளையும் குவித்து போர் தயார் நிலையை ஒத்த பெரும் போர் பயிற்சியில் சீனா ஈடுபட்டுள்ளது.

தாய்வானுக்கு அமெரிக்க பாராளுமன்றக் குழு பிரதிநிதிகள் இராணுவ விமானத்தில் வந்தததைக் கண்டித்து இந்தப் போர் பயிற்சியை நடத்தியதாக சீன இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

தாய்வானை சீனாவின் ஆளுகைக்குள் உள்ள ஒரு பகுதியென சீனா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், இதனை ஏற்க மறுத்து தாங்கள் ஓர் இறையாண்மை கொண்ட சுயாதீன தனியரசு என தாய்வான் தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில் சீண்டும் நடவடிக்கையாக சீன விமானப் படையின் போர் விமானங்கள் அடிக்கடி தாய்வான் வான்பரப்புக்குள் நுழைந்து அந்நாட்டை எரிச்சலூட்டி வருகின்றன. இதனால் சீனா - தாய்வான் இடையில் பதற்ற நிலை அதிகரித்துள்ளது.



இதேவேளை, மற்றொரு எரிச்சலுட்டும் நடவடிக்கையான நான்கு ஜே-16 போர் விமானங்கள் மற்றும் இரண்டு கண்காணிப்பு விமானங்கள் உட்பட ஆறு சீன இராணுவ விமானங்கள் செவ்வாயன்று தாய்வானில் தென்மேற்கு வான் பாதுகாப்பு மண்டலத்திற்குள் நுழைந்தன எனறு தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்க பாராளுமன்ற குழு பிரதிநிதிகள் தாய்வான் சென்றுள்ளனர் என்று செய்திகள் வெளியான அதே நாளில் சீனாவின் இந்த அச்சுறுத்தும் செயல்பாடு முன்னெடுக்கப் பட்டது.

இதேவேளை, அமெரிக்க பாராளுமன்ற பிரநிதிகளின் தாய்வான் விஜயம் குறித்து கருத்து வெளியிட்ட தாய்வான் பிரதமர் சு செங்-சாங் தாய்வான்- அமெரிக்க உறவுகள் “மிக முக்கியமானவை” என்றார் அத்துடன் இது “நண்பர்களிடையேயான பரஸ்பர பயணம்” எனவும் அவர் கூறினார்.

இதற்கிடையே அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் இராணுவ விமானம் மூலம் தாய்வான் வந்தடைந்ததாக சீனாவின் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம், வன்மையாக கண்டிக்கிறோம் என்று அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# மியன்மார் மோதல்களை உடன் நிறுத்த வேண்டும்!

## ஐ. நா. பாதுகாப்பு சபை வலியுறுத்து

நியூயோர்க், நவ. 12

மியன்மார் முழுவதும் அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்து ஐ. நா. பாதுகாப்பு சபை ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

மியன்மாரில் மோதல்களை உடனடியாக நிறுத்துமாறும் இராணுவம் மிகுந்த கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் பாதுகாப்பு சபையின் 15 உறுப்பினர்களும் இணைந்து புதன்கிழமை வெளியிட்ட கூட்டறிக்கையில் வலிறுத்தப்பட்டுள்ளது.

மியன்மார் - சின் மாநிலத்தில் கனரக ஆயுதங்கள் மற்றும் துருப்புக்கள் குவிக்கப்படுகின்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த பெப்ரவரி -01 ஆங் சான் சூகி தலைமையிலான ஆட்சியைக் கவிழ்த்து ஆட்சியை இராணுவம் கைப்பற்றியது. இதனை எதிர்த்துப் போரிட்டு வரும் போராளிக் குழுக்களை வெளியேற்ற உடனடி இராணுவ தாக்குதலை நடத்த இராணுவ ஆட்சியாளர்கள் திட்டமிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மியன்மார் முழுவதும் சமீப காலங்களில் அதிகரித்துவரும் வன்முறைகள் குறித்து பாதுகாப்பு சபை உறுப்பினர்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்தனர். வன்முறையை உடனடியாக நிறுத்த வேண்டும் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சிக்கவிழ்ப்பிற்குப் பின்னர் எதிர்ப்புகள் மற்றும் வன்முறைகளால் மியன்மார் முடங்கியுள்ளது. இராணுவ ஆட்சிக்குழு ஆட்சியை முன்னெடுக்க போராடி வருகிறது. நிழல் அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்த போராளிகள் மற்றும் இன சிறுபான்மை கிளர்ச்சியாளர்களிடமிருந்து ஆயுத ரீதியான எதிர்ப்புக்களையும் இராணுவ ஆட்சியாளர்கள் எதிர்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா, நவ. 12

நுவரெலியா - ஹொரரண பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் சாமிமலை ஸ்டொக்கம் தோட்டத் தொழிற்சாலை பிரிவு தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த தோட்டத்தில் முறையான நிர்வாகம் ஒன்று இல்லை எனவும், கொடுப்பனவுகள் உரிய முறையில் மற்றும் உரிய நேரத்தில் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், உரம் தொடர்பான பிரச்னைக்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

ஸ்டொக்கம் தொழிற்சாலை பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் நேற்று தேயிலைத் தொழிற்சாலை முன்பாக முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர், ஓல்டன் தோட்ட முகாமையாளர் தலைமையில் ஸ்டொக்கம் தோட்ட தொழிலாளர்களுக்கு இந்த மாதத்துக்கான வேதனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கொரோனாவை பயன்படுத்தி எதிரணி அசிங்கமான அரசியல்

## 5 ஆவது அலைக்கு அழைப்பு விடுகின்றனர் அமைச்சர் ரோஹித பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 12



**“நாட்டில் 5ஆவது கொரோனா அலை ஏற்பட்டு அதனால் மரணிக்கும் அத்தனை மக்களுக்கும் பிரதான எதிர்க்கட்சியே பொறுப்புக்கூற வேண்டும். ஏனெனில், கொரோனா மரணங்களே எதிர்க்கட்சியின் எதிர்பார்ப்பு, விருப்பமாகும்.”**

- இவ்வாறு அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஒதுக்கீட்டுச் சட்டமூல திருத்த இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறிய அமைச்சர், மேலும் தெரிவிக்கையில்,

“கொரோனா வைரஸ் திரிபடைந்து வருகின்றது. இது மீண்டும் இலங்கையைத் தாக்குமானால் தடுப்பூசியால்கூட கட்டுப்படுத்த முடியாது. எனவே, மக்கள் சுகாதார விதிமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென மருத்துவ நிபுணர்கள் தினமும் எச்சரிக்கின்றனர். ஆனால், எதிர்க்கட்சி கொரோனாவின் 5 ஆவது அலை எப்போது வரும் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பதுடன் அதற்கு அழைப்பும் விடுக்கின்றது. இது அசிங்கமான அரசியல்.

ஒரு பக்கம் விவசாயிகள் ஆர்ப்பாட்டம். ஆடிப்பாடி வெடிகள் கொளுத்தி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இன்னொரு புறம் ஆசிரியர்கள் போராட்டம். இவற்றுக்கு எதிர்க்கட்சியே அனுசரணை.

2022ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டத் தொடர் நிறைவடைவதற்கு முன்னர் முடிந்தளவுக்கு ஆர்ப்பாட்டங்களைச் செய்வதே இவர்களின் நோக்கம்.

எதிர்க்கட்சி கொரோனாவைப் பயன்படுத்தி அசிங்கமான அரசியல் செய்கின்றது. கொரோனா மரணங்களே எதிர்க்கட்சியின் எதிர்பார்ப்பு, விருப்பமாகும். அதனால்தான் கொரோனாவின் 5 ஆவது அலைக்கு அழைப்பு விடுக்கின்றது. எனவே, நாட்டில் 5 ஆவது கொரோனா அலை ஏற்பட்டு அதனால் மரணிக்கும் அத்தனை மக்களுக்கும் பிரதான எதிர்க்கட்சியே பொறுப்புக்கூற வேண்டும்” - என்றார். (இ)

# மஹிந்த செய்த தவறுகளை பொது மேடையில் சுட்டிக்காட்டிய கோட்டாபயவைப் பாராட்டுகிறோம்

## துஷார இந்துனில் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 12

தனது அண்ணன் என்றும் பாராது மஹிந்த ராஜபக்ஷ செய்த தவறுகளைப் பொது மேடையில் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பாராட்டுகின்றோம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. துஷார இந்துனில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஒதுக்கீட்டு சட்டமூல திருத்த இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறிய துஷார இந்துனில் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

“அண்மையில் பொது மேடை ஒன்றில் பேசிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தான் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும்போது நண்பர்கள், உறவினர்களை அழைத்துச் செல்வதில்லை எனவும், தனது மனைவியைக்கூடச் சொந்தச் செலவிலேயே அழைத்துச் சென்றார் எனவும் கூறியிருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ கூறுவதைப் போன்றே முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாஸ ஆகியோரும் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும்போது நண்பர்கள், உறவினர்களை அழைத்துச் செல்வதில்லை. கோட்டாபய ராஜபக்ஷவின் அண்ணனான மஹிந்த ராஜபக்ஷ தான் ஜனாதிபதியாக இருக்கையில் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும்போது நண்பர்கள், உறவினர்களை அழைத்துச் சென்றார்.

இவ்வாறான தவறுகள் செய்தது தனது அண்ணன் என்றபோதும் அதனைப் பொது மேடையிலேயே தவறு என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாம் பாராட்டுகின்றோம்” - என்றார். (இ

# ‘ஒன்லைன்’ யுகத்துக்கு ஏற்றவகையில் கல்விமுறையை சீரமைக்கவேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

கொழும்பு, நவ. 12



இலங்கையின் கல்விமுறையை ‘ஒன்லைன்’ யுகத்துக்கு பொருத்தமான வகையில் மறுசீரமைப்பு செய்வது அவசியமென்று ஐ. தே. க. தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

‘சூம்’ தொழில்நுட்பம் மூலமான விவாதமொன்றில் கலந்துகொண்டபோது நாட்டின் கல்வித்துறை தொடர்பில் அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே ரணில் விக்கிமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

தாம் கல்வி அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்த காலத்தில் சிறந்த கல்வி முறைமைக்கான அடிப்படையை உருவாக்கியதாகவும் எனினும், தற்போது மீண்டும் கல்வி முறைமையில் திருத்தம் மேற்கொள்ளவேண்டிய தேவை எற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஏகாதிபத்திய அதிகாரத்தை எந்த நிறுவனத்துக்கும் தாரைவார்க்கமாட்டோம்!

## பாராளுமன்றில் மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே திட்டவட்டம்

கொழும்பு, நவ. 12

“கெரவலப்பிட்டி யுகதனவிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்கை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தின் ஊடாக திரவ இயற்கை எரிவாயு விநியோகிக்கும் ஏகாதிபத்திய அதிகாரத்தை எந்த நிறுவனத்துக்கும் வழங்கவில்லை. மன்னார் வளைகுடாவில் எரிவாயு மற்றும் பெற்றோலியம் தொடர்பான ஆய்வு தொடர்பிலும் அதன் ஏகாதிபத்திய அதிகாரமும் இந்த நிறுவனத்துக்குக் கிடைக்காது.”

- இவ்வாறு மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான எஸ்.எம். மரிக்கார் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கெரவலப்பிட்டி யுகதனவிய மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்கை அமெரிக்காவின் நிவ் போடர்ஸ் வலுசக்தி நிறுவனத்துக்கு விற்கவில்லை என்றால் அதுதொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முடியுமா? எப்போது சமர்ப்பிப்பீர்கள்?அத்துடன் கெரவலப்பிட்டி எரிவாயு முனையம்மற்றும்எரிவாயு குழாய்கட்டமைப்பு அமைப்பதற்காக கேள்விகோரலின்போது அதற்கு விண்ணப்பிக்காத நிவ் போடர்ஸ் வலுசக்தி நிறுவனத்துக்கு 250 மில்லியன் டொலர்களுக்கு வழங்குவதற்கு எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என மரிக்கார் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இதற்கு அமைச்சர் காமினி லொக்குகே பதிலளிக்கையில்,

“யுகதனவிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்கை அமெரிக்காவின் நிவ் போடர்ஸ் வலுசக்தி நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பாக அமைச்சரவைக்கு அறிவிறுத்தியுள்ளேன் . உத்தேச ஒப்பந்தம் ஊடாக கைச்சாத்திடப்பட்டிருக்கும் கட்டமைக்கப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாம் அந்த நிறுவனத்துக்கு கெரவலப்பிடி எரிவாயு முனையம்மற்றும்எரிவாயு குழாய் கட்டமைப்பு அமைப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஒப்பந்தத்தின் பிரகாரம் இது 5 வருடங்களுக்கே வழங்கப்பட்டிருக்கின்றது.



அத்துடன், இந்த ஒப்பந்தத்தின் ஊடாக எந்தவொரு நிறுவனத்துக்கும் திரவ இயற்கை எரிவாயு விநியோகிப்பது தொடர்பில் ஏகாதிபத்திய அதிகாரம் வழங்கப்படவில்லை. அதேபோன்று அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளதன் மூலம் மன்னார்வளை குடாவில்எரிவாயு மற்றும் பெற்றோலியம் தொடர்பான ஆய்வு தொடர்பிலும் அதன் ஏகாதிபத்திய அதிகாரமும் இந்த நிறுவனத்துக்கு கிடைக்காது.

ஒப்பந்தங்கள் ஊடாக நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் எமது அரசு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனைசெய்யாது.

அத்துடன் யுகதனவிய மின் உற்பத்தி நிலையம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின் பிரதியை அடுத்த வாரம் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பேன். அதேபோன்று கெரவலப்பிட்டி எரிவாயு முனையம் மற்றும் எரிவாயு குழாய் கட்டமைப்பு அமைப்பதற்கு சர்வதேச கேள்வி கோரலின் அடிப்படையிலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டோம். எமது நாட்டுக்கு அதிக இலாபம் கிடைக்கும் நிறுவனத்துக்கே அதனை வழங்கவுள்ளோம்” - என்றார். (இ)

ஈழநாடு



# பந்துலவின் மாதாந்தத் தேநீர் செலவு மட்டும் 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய்

## சபையில் எதிரணி தெரிவிப்பு



கொழும்பு, நவ. 12

ஒரு குடும்பம் வாழ ஒரு மாதத்துக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் போதும் எனத் தெரிவித்த வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் மாதாந்தத் தேநீர் செலவு மட்டும் 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. துஷார இந்துனில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஒதுக்கீட்டு சட்டமூல திருத்த இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறிய துஷார இந்துனில் எம்.பி., மேலும் தெரிவிக்கையில்,

"வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன முதலில் தனது அலுவகலகத்தைச் சதொச கட்டடத்தின் மேல் மாடியில் அமைத்திருந்தார். பின்னர் அதில் திருப்தி அடையாமல் தந்த அலுவலகத்தைக் காலி வீதிக்கு மாற்றினார். அந்தக் கட்டடத்தின் மாத வாடகை மட்டும் 80 இலட்சம் ரூபாய்.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன ஒரு குடும்பம் வாழ ஒரு மாதத்துக்கு 2 ஆயிரத்து 500 ரூபா போதும் எனக் கூறியிருந்தார். ஆனால், அவரின் அலுவலகக் கட்டடத்தின் மாத வாடகை மட்டும் 80 இலட்சம் ரூபாய். அதுமட்டுமன்றி அமைச்சர் பந்துலவின் மாதாந்த தேநீர்ச் செலவு மட்டும் 2 ஆயிரத்து 90 ஆயிரம் ரூபா" - என்றார். (இ)






## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 09 - 04 - 1937 |  | 09 - 11 - 2021 |

### திருமதி துரைராஜா கமலேஸ்வரி

**(முன்னாள் மாதர் சங்க தலைவி, செஞ்சிலுவை சங்க உறுப்பினர்)**

யாழ்ப்பாணம் இல. 15/10 மணிக்கூட்டு வீதியைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை கமலவாசம் மூளாய் றோட்டை வசிப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட துரைராஜா கமலேஸ்வரி அவர்கள் 09-11-2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி ராஜதுரை தம்பதியரின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை துரைராஜாவின் ஆருயிர் மனைவியும், சாந்தினி, சாந்தகுமார், மாலினி, விமலினி, காமினி, பிறேம்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், அருளானந்தம், ஜெயரூபி, பாலேந்திரன், சுகந்தன், ரதன், நிருத்திகா ஆகியோரின் அன்பு மாமியாரும், பரமேஸ்வரி, அமரசிங்கம், கனகலிங்கம், சண்முகலிங்கம், ரட்ணசிங்கம், மகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**சாந்தகுமார் - மகன்**
Mobile : +14168268948

தகவல்:
**குடும்பத்தினர்.**





# நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்ட யாழ். இந்து மைதானம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம். நவ. 12

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடல் இன்றைய தினம் காலை 9.00 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது.**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பிரித்தானியக் கிளையின் பழைய மாணவர்களால் 'திடல் திட்டம்' ஊடாக புனரமைக்கப்பட்ட விளையாட்டுத்திடல் தொடர்பில் ஒரு விசேட ஊடக சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. அச் சந்திப்பின்போது புதிதாக புனரமைக்கப்பட்டுள்ள மைதானத்தில் உள்ள விசேட அம்சங்களும், திறப்பு விழா குறித்த விடயங்களும் தெளிவுபடுத்தப்பட்டன.

யாழ். இந்துக் கல்லூரியின் பிரித்தானிய கிளையின் பழைய மாணவர் சங்கத் தலைவரான எஸ். ஜெயப்பிரகாஸ் அது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

"வட மாகாணத்திலேயே சிறந்த ஒரு பாடசாலை மைதானத்தை நாங்கள் உருவாக்க வேண்டும். எமது மாணவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய மாணவர்களுக்கும் இந்த மைதானம் பயன்பட வேண்டும். வடக்கு - கிழக்கில் உள்ள இளையோர்கள் விளையாட்டுகளிலும் சிறப்பாக ஈடுபட்டு தேசிய ரீதியிலும் சாதிக்க வேண்டும். அதற்கான வசதிகளை எம் மாணவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கில் தான் மேற்படி மைதானம் பிரித்தானியா வாழ் பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டுள்ளது" எனக் குறிப்பிட்டார்.

எமது மாணவர்கள் கல்வியைப் போல் விளையாட்டிலும் சாதிக்க சிறந்த ஒரு வாய்ப்பை உருவாக்கி கொடுத்த யாழ் இந்துக் கல்லூரியின் பிரித்தானியா வாழ் பழைய மாணவர்களுக்கு மிகப்பெரிய நன்றி என சந்திப்பில் கலந்து கொண்ட மாணவர் தலைவர் மதுசன் குறிப்பிட்டார்.

"இனிவருங்காலங்களில் நவீன வசதிகொண்டு புனரமைக்கப்பட்டுள்ள இந்த மைதானத்தில் விளையாடி எமது மாணவர்கள் மேலும் பல சாதனைகளை கல்லூரிக்கு ஈட்டித் தருவார்கள் எனத் தான் நம்புவதாகவும், யாழ் இந்து மைதானத்தின் குறைகளை தீர்த்து தந்த பிரித்தானிய கிளையினருக்கு பாடசாலை சார்பில் பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் சுவாமிநாதன் நன்றி தெரிவித்தார்.

விரைவாக மழைநீர் வழிந்தோடக் கூடிய சிறந்த வடிகாலமைப்பு வசதி, இலத்திரனியல் ஸ்கோர் போட், விளையாட்டு வீரர்களுக்கான அறைகள், பயிற்சிகளுக்கான இடம் மற்றும் மைதான பராமரிப்புப் போன்ற வசதிகளுடன் 5கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் இந்த நவீன விளையாட்டுதிடல் உருவாக்கப்பட்டுள்ளது. எந்தக் காலநிலையையும் தாங்கக் கூடிய புல் இனத்தைத் தெரிவு செய்த துடன் நவீன நீர் விசிறிக் குழாய் தொடர்புகளும் அமைக்கப்பட்டிருக்கிறது.

புதிய மைதானத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி மோதும் 19 வயதிற்குட்பட்டோருக்கான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றும் இடம்பெறவுள்ளது. இந்த விளையாட்டுத்திடலில் உள்ள பல்வேறு சிறப்பு அம்சங்கள் வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளிலேயே மிகவும் நவீனகரமானவையாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜனாதிபதி செயலணியில் இருப்பவர்களின் தகுதிகள் தொடர்பில் எவரும் வினவ முடியாது

## அநுரவுக்கு வீரசேகர இப்படி பதில்

கொழும்பு, நவ. 12

ஒரே நாடு - ஒரே சட்டம் எனும் சட்டம் எனும் செயலணிக்கான நியமனங்கள் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களுக்கு அமையவே இடம்பெற்றது என்றும், இதனால் செயலணியில் இருப்பவர்களின் தகுதிகள் தொடர்பில் கேட்காது ஜனாதிபதியின் பணியை முன்னெடுக்க இடமளிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கேட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின்போது, ஒரே நாடு - ஒரே சட்டம் செயலணி தொடர்பில் ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதியின் அதிகாரத்துக்கமையவே ஜனாதிபதி செயலணிக்கான நியமனங்கள் இடம்பெற்றுள்ளன. நீங்கள் (அநுரகுமார) நல்லாட்சி காலத்தில் தேசிய நிறைவேற்றுக் குழுவுக்கு நியமிக்கப்பட்டீர்கள். ஊழல் - மோசடி பிரிவுக்கும் நியமிக்கப்பட்டீர்கள். அதன்போது உங்களின் தகுதி தொடர்பில் யாரும் கேள்வி எழுப்பவில்லை.

அலரிமாளிகையில் இருந்து நீங்கள் நினைக்கும் அரசியல்வாதிகளுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும்போது அந்த ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்தமை தொடர்பில் யாரும் கேட்கவில்லையே. இதனால் இந்தச் செயலணியின் உறுப்பினர்களின் தகுதி தொடர்பிலும் கேட்காது ஜனாதிபதிக்கு அவரின் பணியை செய்ய இடமளியுங்கள்" - என்றார்.(இ)

# 11 மாவட்டங்களுக்கான மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிப்பு

## கண்டி, கேகாலை, குருநாகலுக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 12

நாட்டில் 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் இதனைத் தெரிவித்துள்ளது.

பதுளை, கொழும்பு, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, காலி, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கண்டி, கேகாலை, குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ)

ஈழநாடு



## தமிழர்களுக்கு...

தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம். பியான சி. சிறீதரன், ஒதுக்க காடுகள் என்றுகூறி தமிழ் மக்களை விவசாயம் செய்ய விடாது தடுக்கின்றனர். மறுபுறம் 9,000 ஏக்கர் காடுகளை அழித்து சிங்களவர்களை குடியேற்றுகின்றனர். இதுதான் இந்த நாட்டின் ஒரே நாடு ஒரே சட்டமா? தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம் சிங்கள மக்களுக்கு ஒரு சட்டமா? என்றும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை பேசிய அவர்,

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களை வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, வடக்கு மாகாணத்தின் வாசலாக இருக்கின்ற வவுனியா மாவட்டத்தில் அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள கனுகவெவை, கம்பிலிவெவை, வெகரதென்ன ஆகிய 3 சிங்கள குடியேற்ற கிராமப் பிரிவுகள் வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவின் வெடிவைத்தகல்லு கிராம அதிகாரி பிரிவுடன் இணைக்க அனைத்து அரச நிர்வாக செயல்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யுத்தம்காரணமாக கைவிடப்பட்டிருந்த காச்சல் சமலங்குளம் என்ற பாரிய குளம், அதனோடு இணைந்த சிறிய குளமும் வவுனியா அரச அதிபர், வவுனியா கமநல சேவைத் திணைக்களத்துக்கு தெரியாமல் அநுராதபுரம் கம நல சேவைத் திணைக்களத்தால் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு சிங்கள மக்களுக்கு 2 ஏக்கர் வீதம் பயிர் செய்கை நிலங்களை வழங்கி குடியேற்றம் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த விடயத்தில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் போன்ற நிறுவனங்கள் மிகவும் வேகமாகவும் அதே நேரம் தமிழர்களின் குடிப்பரம்பலை இந்த மாவட்டத்தில் அழித்தொழிக்கும் நடவடிக்கையிலும் செயல்பட்டு வருகின்றன. இது வெளிப்படையாகவே தமிழினம் இன ரீதியான அழிப்புக்கு உட்படுத்தப் படுவதனை காட்டிநிற்கின்றது.

வவுனியாவில் தமிழ் மக்கள் வாழும் எண்ணிக்கையையும் செறிவையும் இல்லாமல் செய்யவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வவுனியா மாவட்டத்தின் கொக்கச்சங்குளம் என்ற தமிழ் கிராமம் இன்று பொகஸ்வெவை என பெயர் மாற்றப்பட்டு 9,000 ஏக்கர் காடுகளை அழித்து சிங்களவர்களின் குடியேற்றத்துக்காக வழங்க வனவளத் திணைக்களம் தயாராகி வருகின்றது. அதே நேரம் குருந்தூர் மலையில் உள்ள வயல் வெளிகளில் ஒதுக்கப்பட்ட காடுகள் என்ற பெயரில் அங்கு பல தசாப்தங்களாக பரம்பரை பரம்பரையாக வயல் செய்து வந்த முல்லைத்தீவு மாவட்ட தமிழ் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

வழக்குகள் போட்டும் நீதி கிடைக்காத இந்த நாட்டில் பிக்குமார் படை படையாக வந்து இன ரீதியான வேறுபாட்டை ஏற்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்துகின்றனர். ஒதுக்க காடுகள் என்று கூறி தமிழ் மக்களை விவசாயம் செய்ய விடாது தடுக்கின்றனர். மறுபுறம் 9,000 ஏக்கர் காடுகளை அழித்து சிங்களவர்களை குடியேற்றுகின்றனர். இதுதான் இந்த நாட்டின் ஒரே நாடு ஒரே சட்டமா? தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம் சிங்களமக்களுக்கு ஒரு சட்டமா? அல்லது ஒரே நாடு ஒரே சட்டம் எனக் கூறி சிங்களவர்களுக்கான சட்டம் மட்டும்தான் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா?இந்த நாட்டில் சட்டம், நியாயம், நீதி என்பது சிங்களவர்களுக்கு மட்டும் உரியதாகவே உள்ளது. இந்த நாட்டின் பிரஜைகளாக தமிழர்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லையா? - என்று கேள்வி எழுப்பினார்.

## 'டான்' அலுவல...

துள்ள குருதிக் கொடை முகாம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல. 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள டான் தொலைக்காட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை குருதி வங்கியில் இருக்கவேண்டிய ஆகக் குறைந்த குருதியின் அளவு 330 பைந்த் ஆகும். ஆனால் தற்போது இருக்கும் குருதியின் அளவோ 200 பைந்த் ஆகும். இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் குருதி வங்கி காணப்படுகின்றது.

இந்நிலையில் குருதி வங்கிக்கு உதவும் நோக்குடன் டான் தொலைக்காட்சி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த குருதிக்கொடை முகாமில் பங்கேற்று குருதிக்கொடை வழங்க விரும்பும் அனைவரையும் நாளை காலை இந்த முகாமில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-03)

## எல்லை மீள்...

இவ்வாறான நடவடிக்கைகளால் இனங்களுக்கு இடையே பகைமை உருவாகுமே தவிர நல்லிணக்கமோ அபிவிருத்தியோ இடம்பெறாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், "அரசாங்கத்தின் காணி சுவீகரித்தல் என்பது இன்று மிகப்பெரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்படுகின்றன. தலைமுறை தலைமுறையாக எமது மக்கள் வைத்திருந்த காணிகளே இவ்வாறு இராணுவத்தாலும், அரசாங்கத்தாலும் அபகரிக்கப்படுகின்றன. அரச காணிகளில் மக்களே வசிக்க வேண்டும். ஆனால், அரசாங்கமே முழுமையாக இவற்றை அபகரிக்கின்றது.

அல்லைப்பிட்டியில் 80 பேர்ச், மண்கும்பானில் 70 பேர்ச் மற்றும் புங்குடுதீவில் 14 ஏக்கர் காணிகளை இராணுவம் அபகரித்துள்ளது. இவை தனியார் காணிகள். அதற்கான உறுதிப்பத்திரத்தை அவர்கள் வைத்துள்ளனர். ஆனால், அதனையும் மீறி .அபகரிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மயிலத்தமடு பகுதியில் 15 ஆயிரம் ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இவையும் தனியார் காணிகள. ஏனைய சிங்கள பகுதிகளில் உள்ள மக்களுக்கு இந்த காணிகளை அபகரிக்க அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் நீதிமன்றத்தை நாடி தமக்கான நீதியைக் கேட்டனர். இதன்போது குறித்த காணிகள் தமிழ் மக்களின் மேய்ச்சல் காணிகள் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும், இன்றுவரை அந்தக் காணிகளில் இருந்து அவர்கள் வெளியேறவில்லை. இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அவர்கள் வெளியேற வேண்டும் எனக் கூறியும் அவர்கள் இன்றுவரை வெளியேறவில்லை.

இவற்றுக்கு மத்தியில் எல்லை மீள் நிர்ணயம் என்ற பெயரில் தமிழர் பகுதிகளை சிங்கள பகுதிகளுடன் இணைக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. வவுனியா வடக்கில் நெடுங்கேணியில் ஒரு பகுதி கெப்பிட்டிக்கொலாவையுடன் இணைத்து எல்லை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது திட்டமிட்ட இனப்பரம்பலை மாற்ற எடுக்கும் நடவடிக்கை. எமது பிராந்தியத்தின் ஜனநாயக பரம்பலை மாற்றியமைக்கும் வேலைத்திட்டத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது, இவ்வாறான நடவடிக்கைகளினால் இனங்களிடையில் பகைமை உருவாகுமே தவிர நல்லிணக்கமோ அபிவிருத்தியோ இடம்பெறாது.

வடக்கு, கிழக்கில் இவ்வாறு திட்டமிட்ட இனப் பரம்பலை மாற்றியமைக்க எடுத்த முயற்சிகள் காரணமாகவே முரண்பாடுகள் ஏற்பட்டன. இவ்வாறான இன முரண்பாடுகளை மீண்டும் உருவாக்க எடுக்கும் சதிகளை தமிழ் கட்சிகளாக நாங்கள் அனைவரும் கடுமையாக எதிர்க்கிறோம் - என்றார்.

## 19 பேர்...

உயிரிழந்தவர்களில் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களுள் 3 ஆண்கள், ஒரு பெண் அடங்கலாக 4 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 8 ஆண்களும் 7 பெண்களுமாக 15 பேரும் உயிரிழந்தனர்.

இந்த மரணங்களுடன் நாட்டில் இதுவரை கோவிட் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 927 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## மார்ச் 15 இல்...

புனிதர் பட்டம் பெறும் முதல் தமிழர் இவராவார்.

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான கன்னியாகுமரியைச் சேர்ந்த தேவசகாயம் என்ற சாதாரண மனிதருக்கு புனிதர் பட்டம் வழங்கப்படுமென வத்திக்கானில் உள்ள திருச்சபை கூட்டமைப்பு முறைப்படி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அந்த வகையில் இந்தியாவைச் சேர்ந்த சாமானியர் ஒருவருக்கு புனிதர் பட்டம் வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும். மேலும் தேவசகாயம் உட்பட உலகளவில் 6 பேருக்கு அடுத்த ஆண்டு மார்ச் 15ஆம் திகதி புனிதர் பட்டம் வழங்கப்படுமெனவும், வத்திக்கானில் உள்ள புனித பீற்றர் தேவாலயத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**யார் இந்த தேவசகாயம்?**

அப்போதைய திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்கு உட்பட்ட பகுதியும் தற்போதைய தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நட்டாலம் அருகேயுள்ள பள்ளியாடி எனும் கிராமத்தில் வாசுதேவன் - தேவகி தம்பதியருக்கு 23.4.1712ஆம் ஆண்டு மகனாக பிறந்தவர். இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் நீலகண்ட பிள்ளை. இவருடைய தந்தை வாசுதேவன், திருவிதாங்கூர் அரசவையில் செல்வாக்கு பெற்றவராக திகழ்ந்தார், அதன் காரணமாக தனது மகன் நீலகண்டபிள்ளையையும் அரசில் வேலைக்கு சேர்த்துவிட்டார்.

**மதமாற்றம்:**

1741ஆம் ஆண்டு டச்சு கப்பல் படைகள் குளச்சல் துறைமுகத்தை கைப்பற்றும் நோக்கில் போரிட்டன. இதில் டச்சு படைகள் தோற்றபோது அப்படையில் கப்டனான யூஸ்டாசியஸ் டி லனாய் சிறைபிடிக்கப்பட்டு பின்னர் அவரை மன்னித்து திருவிதாங்கூர் படையில் மன்னர் சேர்த்தார். பின்னர் அரசரின் நம்பிக்கையை பெற்று யூஸ்டாசியஸ் டி லனாய் தளபதியாக உயர்ந்தார். யூஸ்டாசியஸ் டி லனாயின் பழக்கத்தால் அவர் பின்பற்றிய கிறிஸ்தவ மதத்தினால் ஈர்க்கப்பட்ட நீலகண்ட பிள்ளை தன்னை கிறிஸ்தவ மதத்தில் இணைத்துக்கொண்டு லாசர் என பெயரை மாற்றிக் கொண்டார். கடவுள் ஊழியன் என பொருள்படும் வகையில் தேவசகாயம் எனும் தனக்கு பெயர் சூட்டிக்கொண்டார்.

தேவசகாயம் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றியதால் அவர் கைது செய்யப்பட்டு 1752ஆம் ஆண்டு கொல்லப்பட்டதாக வத்திக்கான் செய்திக் குறிப்புகள் குறிப்பிடுகின்றன.

இந்நிலையில் 2012ஆம் ஆசீர்வதிக்கப் பட்டவராக பாப்பரசரால் அறிவிக்கப் பட்டார். தற்போது அவர் புனிதராகவும் அறிவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேவசகாயம் புனிதர் பட்டம் பெறும் முதல் தமிழர் என்பதும் கவனிக்கத்தக்கது. (அ)

## அரசியல் தீர்வும்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவினருக்கும் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அவரும், வெளிநாட்டுக்கான தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ள காரணத்தால் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரமும், உறவினரின் மரணவீட்டுக்குச் சென்ற காரணத்தால் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கமும் நேற்றைய சந்திப்பில் பங்கேற்கவில்லை. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்டனர்.

வடக்கு, கிழக்கின் தற்போதைய நிலைமை, இந்தியாவின் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், மாவட்ட ரீதியிலான தனித்தனியான துரித அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நீண்டகால அபிவிருத்தி நலத்திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இந்திய வீட்டுத்திட்டம் உள்ளிட்ட முக்கிய காரணிகள் குறித்தும் இதன் போது பேசப்பட்டன.

இந்திய - இலங்கை மக்களுக்கு இடையிலான தொடர்பாடல், இராமேஸ்வரம் படகு சேவை, பலாலி விமான நிலைய அபிவிருத்தி, காங்கேசன்துறை அபிவிருத்தி குறித்தும் இதன்போது முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடப்பட்டன.

புதிய அரசமைப்பு உள்ளிட்ட அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பிலும் இதன் போது பேசப்பட்டது. (இ)

## மீண்டும் நாளாந்த...

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 48 ஆயிரத்து 61 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 272 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 22 ஆயிரத்து 789 ஆக உயர்வடைந்துள்ளது.

## வெள்ள இடரினால்...

மத்திய நிலையம் தெரிவித்தது.

நேற்று பிற்பகல் 3.30 மணி வரையிலான மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு விவரங்களை யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டது.

அந்த அறிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் அண்மையில் பெய்த மழை காரணமாக 86 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரமே இடம்பெயர்ந்தவர்கள் என்றவகையிலே 5 தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு வீடு முழுமையாக சேதம் அடைந்துள்ள நிலையில் 111 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன -என்றுள்ளது. (அ-03)

## 222,590 பேர்...

ஆயிரத்து 700 பேர் இடம்பெயர்ந்து 80 இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேசமயம், மோசமான வானிலையால் 25 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காணாமல் போயுள்ளார். கடும் மழையால் 17 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## யுகதனவி...

இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

உத்தேச உடன்படிக்கையின் பிரகாரம் எல்.என்.ஜி விநியோகத்துக்கான நிறைவேற்று அதிகாரம் எந்தவொரு நிறுவனத்துக்கும் வழங்கப்படமாட்டாது.

அதேபோல மன்னாரில் மேற்கொள்ளப்படவுள்ள எரிவாயு தொடர்பான ஆய்வுகளிலும் சம்பந்தப்பட்ட நிறுவனம் அதிகாரம் செலுத்த முடியாது. வெளிநாட்டு முதலீடுகளை அரசு கொண்டுவருகின்றதேதவிர, தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யவில்லை.

உத்தேச யுகதனவி ஒப்பந்தம் அடுத்த வாரமளவில் சமர்ப்பிக்கப்படும் - என்றார். (அ)

## ஒன்றுகூடல்களை...

தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்பு கட்டளைச் சட்டத்திற்கு அமைய, அதிவிசேட வர்த்தமானியினூடாக புதிய கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, முழு நாட்டிற்கும் அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரால் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்காக பிறப்பிக்கப்படும் கட்டளைகளும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அனுமதி பெறாது ஒன்றுகூடல்களை நடத்தக்கூடாது என அதிவிசேட வர்த்தமானியில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu

# ரி - 20 உலகக் கிண்ணம்: இறுதி போட்டியில் ஆஸி!

## மரண அறிவித்தல்

பிறப்பு
11 - 09 - 1940



இறப்பு
31 - 10 - 2021

### திருமதி பிறிம்ரோஸ் பத்மாமலர் ஞானசுந்தரம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*

கரவெட்டி கிழக்கு, கட்டைவேலி அடைப்பைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பிறிம்ரோஸ் பத்மாமலர் ஞானசுந்தரம் அவர்கள் 31.10.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான காசிநாதன் நதானியேல் நவரத்தினம்(ஓய்வுபெற்ற ரயில்வே தலைமைக் காவலர்) லக்ஷிமிப்பிள்ளை நவரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும்,காலஞ்சென்ற றொபேர்ட் குஞ்சுத்தம்பி ஞானசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தேம்பாமலர் சுப்ரமணியம், சீதாமலர் வேலும் மயிலும், தயாலமலர் வேலாயுதம், நவமலர் துரைரத்தினம் மற்றும் நேசமலர் மகிழ்ராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,சுதோதனன், சுதோமதி, ஞானநாதம் மற்றும் நதானியல் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஷெரின், ஜெயஸ்ரீ, ஷியாமலா மற்றும் சிவகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும்,ஷான், தாமரி மற்றும் கிடியோன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும்,சுஹன்யா, ஜீவிதம், நிலார்னி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

*இறுதி ஆராதனை*
Tuesday, 16 Nov 2021 12:00 PM - 2:15 PM
Spital Street Methodist Church 43 Spital St, Dartford DA1 2DX, United Kingdom

*நல்லடக்கம்*
Tuesday, 16 Nov 2021 3:00 PM - 3:45 PM
Thames - View Crematorium and Cemetery Gravesend Rd, Chalk, Gravesend DA12 3JH, United Kingdom

*மதிய போசனம்*
Tuesday, 16 Nov 2021 4:00 PM - 6:30 PM
Luddesdown Village Hall Luddesdown Village Hall, Luddesdown Road, Luddesdown, Kent, DA13 0XE

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**ஞானநாதம் - மகன்**
Mobile : +61411231227

*தகவல்:*
**குடும்பத்தினர்.**



*டுபாய், நவ. 12*

*மத்தியூ வேட்டின் அதிரடி சிக்ஸர்கள் மூலம் அவுஸ்திரேலியா அணி பாகிஸ்தானை 5 விக்கெட்களால் வெற்றி கொண்டது. இந்த வெற்றியின் மூலம் இருபது - 20 உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலிய அணி முன்னேறியது.*

*இதன்மூலம் நாளை மறுதினம் நடக்கவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி நியூசிலாந்து அணியை எதிர்கொள்கின்றது.*

*டுபாயில் நேற்றிரவு நடந்த இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.*

*இதனால், முதலில் துடுப்பெடுத்தாடியது பாகிஸ்தான் அணி. முஹமட் ரிஸ்வான், பாபர் அஸாம் இணை தொடக்கம் கொடுத்தது. சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்திய இந்த இணை 71 ஓட்டங்களை சேர்த்தது. பாபர் அஸாம் 5 பௌண்ட்ரிகளுடன் 39 ஓட்டங்களை சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.*

*ரிஸ்வானுடன் மறுமுனையில் இணைந்த பக்ஹார் ஷாமன் அதிரடியாக ஆடினார். இருவரும் அணியின் ஓட்டத்தை வேகமாக உயர்த்தினர். 4 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளை விளாசிய ரிஸ்வான் 67 ஓட்டங்களை 52 பந்துகளில் சேர்த்து ஆட்டமிழந்தார்.*

*20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்களை மட்டும் இழந்த பாகிஸ்தான் அணி 176 ஓட்டங்களை குவித்தது.*

*பக்ஹார் ஷாமன் 32 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களை பறக்கவிட்டு 55 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்திருந்தார்.*

*அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் மிற்செல் ஸ்ரார்க் 2 விக்கெட்களையும், பற் கம்மின்ஸ், அடம் ஷாம்பா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.*

*பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு தொடக்கம் கொடுத்தவர்களில் ஒருவரான அணித் தலைவர் அரோன் பின்ஞ் ஓட்டம் எதனையும் பெறாமலே ஆட்டமிழந்தார். வோர்ணருடன் அடுத்து இணைந்த மிற்செல் மார்ஸ் 28 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.*

*அவரைத் தொடர்ந்து ஸ்ரீவன் ஸ்மித் 5, வோர்ணர் 49 (3 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகள்) மக்ஸ்வெல் 7 ஓட்டங்கள் என வேகமாக விக்கெட்களை இழந்தனர். இதனால் 96 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து அவுஸ்திரேலிய அணி தடுமாறியது.*

*எனினும், ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 40 ஓட்டங்களையும், மத்தியூ வேட் 17 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளை விளாசி 41 ஓட்டங்களையும் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில், 19 ஓவர்கள் நிறைவில் 177 ஓட்டங்களைப் பெற்று அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.*

*பாகிஸ்தானின் பந்துவீச்சில் சதாப் கான் 4 விக்கெட்களையும், ஷா அப்ரிடி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக மத்தியூ வேட் தெரிவானார்.*










*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சாருலதா,மங்காத்தா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்-நகைச்சுவை நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - வாந்திகள்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டி டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்